ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1—12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹூ பங்குனி-மீ 13-உ (26—3—1933) | மலர் 48.

லெனினும், மதமும்

இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரசு குடும்பத்தை வேருடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் தொண்டைமான்வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆட்சி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள் என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினால் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெறாமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்றாய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணா 0—3—0

விலையுடன் ஒரு அணா ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

இந்தியாவின் குறைபாடுகள்.

The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+ இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும் நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணு ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ... 0—6—0
மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது
பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

———)G(———

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:--

Kudi Arasu Book Depot, Erode.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது. பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0

மானேஜர்

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சி முறையும்"

விலை ரூ. 2. (தபால் சார்ஜ் வேறு)

3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொள்ளலாம். தொழில் முறையில் தேர்ச்சி பெறத்தகுந்த சமயம். எம்மிடம் கிடைக்கும்.

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

சென்னை லோகல் போர்டு ஆக்டு.

(1930ம் வருஷ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0.
மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

"பொதுடமைத் தத்துவங்கள்".

Principles of Communism by Engels. (1847)

(பேர்டரிக் ஏஞ்சலஸ் எழுதியது)

கேள்வி:—பொதுவுடைமை என்பது என்ன?

பதில்:—ஏழை மக்களின் விடுதலைக்கு அவசியமான சில தத்துவங்களே பொதுவுடைமையாகும்.

கேள்வி:—ஏழைகள் என்பவர் யார்?

பதில்:—தங்களுடைய தொழிலின் விற்பனையாலேயே (பயனால்) ஜீவிக்கின்றவர்களும்; மூலதனத்தின் ஊதியத்தினால் (முதலின் லாபத்தினால்,) யாதொருபிரயோஜனமும் அடையாதவர்களுமாகிய(சமூகத்திலுள்ள)ஒருவகுப்பாளார். இவர்கள் ஏழைகளென்றழைக்கப்படுகின்றவர்கள். இவர்களுடையக்ஷேமலாபங்களும், அவர்களுடைய ஜீவனமும்;—தொழிலின், கட்டிலடங்காத போட்டியினாலேற்படும் வியாபாரநிலை, மாற்றம் முதலியவைகளைப் பொருத்திருக்கின்றன. ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால் இந்தப் 19ம் நூற்றாண்டின் தொழிலாளர் (உழைப்பாளிகள்) கள் தான் ஏழைகளாவார்கள்.

கேள்வி:—ஏழைகள் எக்காலத்திலும் இருக்கவில்லையா?

பதில்:—இல்லை. தொழிலாளர் (உழைப்பாளி) வகுப்பினரே எக்காலத்திலும் ஏழைகளாக இருந்திருக்கின்றனர்.

கேள்வி:—ஏழைகள் எப்படி உண்டாயினர்?

பதில்:—இங்கிலாந்தில் 18வது நூற்றாண்டின் பிற்பகுதியில் நடந்த (Industrial revolution) தொழிற் புரட்சியாலும், பின்னர் உலகத்திலுள்ள நாகரீக தேசங்களில் இதேமாதிரி கைத்தொழில் முறைகளில் தீவிர மாறுதல்கள் ஏற்பட்டதினாலும் ஏழைகள் உண்டானார்கள்.

கேள்வி:—தொழில் புரட்சி எப்படி உண்டாயிற்று?

பதில்:—இயந்திர உலகத்தில் நீராவியந்திரம், பல திறப்பட்ட நூற்கும்யந்திரங்கள், நெசவு விசைத்தறிகள் முதலியவைகள் கண்டுபிடிக்கப்பட்டதின் பயனாய் கைத்தொழில் முறையிலேயே தலைகீழ் மாறுதல்களை உண்டாக்கி விட்டதால்இந்தகைத்தொழில்புரட்சியானதுஏற்பட்டது.

மற்றும் இயந்திரங்கள் மிகவும் விலை அதிகமாக இருந்ததினால் பெரும் மூலதனங்களைக் கையாளக்கூடிய, பெரிய முதலாளிகளே தான் அவைகளை ஸ்தாபிக்க வல்லவர்களாயிருந்தார்கள். அவ்வியந்திரங்களை புகுத்தியதினால் உற்பத்தி (அதிகமாகும்) முறைகளும் அதில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் தேவை குறைவும் ஆகிய காரியங்களால் அவர்களது நிலைமை முற்றிலும் மாறுபாடடைந்தது.

இயந்திரங்கள் பண்டைக் கால கை இராட்டினங்களை உபயோகப்படுத்தி வந்த சிறு கைத்தொழிலாளிகளைப் பார்க்கிலும், மலிவான நல்ல பண்டங்களை உற்பத்தி செய்து வந்ததே இம்மாறுதலுக்கு முக்கியமானதொரு காரணம். இவ்விதமாக கைத்தொழில்களுக்கு பதிலாக இயந்திரங்கள் கண்டு பிடிக்கப் பட்டதினால் தொழில் முறைகள் பெரும் முதலாளிகள் கைக்குள் சிக்கி கைத்தொழில் உழைப்பாளரின் சொத்தாகிய ஆயுதங்களான, கைத்தறிகள் முதலியவை எல்லாம் உபயோகமற்றதாகப் போய் விட்டன. இதன் பயனாய் வெகு சீக்கிரத்தில் உற்பத்தி மார்க்கங்களையெல்லாம் முதலாளி மார்களே கைப் பற்றி விட்டனர். ஆனால் தொழிலாளர்களோ இவற்றுள் எதையும்கைப்பற்ற முடியாதவர்களாகி விட்டனர்.

முதன் முதலாக ஆடை உற்பத்தியில் யந்திரத்திட்டம் புகுத்தப் பட்டது. அதன் பயனாகஉற்பத்தியானது (இத்திட்டத்தினால்) அதிகப்பட்டு சிறிது பலம் பெற்றவுடனே இத்திட்டமானது உற்பத்தி மார்க்கத்திலுள்ள இதர பிரிவினைகளிலும் (தொழில்களிலும்) வெகு சீக்கிரமாக நுழைந்து விட்டது. முதன்முதல்இம்மாதிரிஇயந்திரதிட்டத்தினால் கைப்பற்றப்பட்ட தொழில்கள்:—1. ஆடை உற்பத்தி 2. அச்சுத் தொழில் 3. குயக்கலம் (பாண்டம்) செய்யும் தொழில் 4. உலோக உற்பத்தித்தொழில் ஆகிய இவைகளே யாகும்.

முன்னர் தன்னுடைய சொந்த முயற்சியினாலேயே ஒரு சாமானை உற்பத்தி செய்து வந்த ஒரு தொழிலாளி யந்திர திட்டத்தின் பயனாய் அச்சாமானின் ஒரு பாகத்தையே தற்பொழுது உற்பத்தி செய்யும் ஒரு நிலைக்கு கொண்டு வரப்பட்டு விட்டான். இது போலவே எல்லாக் கைத்தொழில் களும் பல திறப்பட்ட பாகங்களாக பிரிக்கப் பட்டு ஒவ்வொரு பாகத்திற்கு ஒவ்வொரு தொழிலாளியாய் ஏற்பட்டு விட்டார்கள். இவ்வித தொழில் பிரிவு பாகங்களினால் (Division of Labour) உற்பத்தியானது அதிகப் படுத்தப்பட்டு விட்டதால் சாமான்கள் மிக சல்லிசான விலைக்கு விற்கப்பட்டன.

தொழிலாளியின் வேலையானது மிகவும் எளிதாக்கப் பட்டதுடன் அவனுடையசெய்கைகள்கேவலம் ஒருஇயந்திர முறை போல் தான் இருக்க நேர்ந்தது. இயந்திரங்கள் தொழிலாளி உற்பத்தி செய்தது போலவே சாமானை செய்தது மல்லாமல் அவனை விட மிகவும் சிலாக்கியமான விதத்திலும் சமான்களை உற்பத்தி செய்தன. நாளாவட்டத்தில் படிப்படியாக எல்லாத் தொழில்களும் நீராவியந்திரங்கள், (மிஷன்) ஆலைத்திட்டம் ஆகிய இவைகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்து விட்டன. அதே காலத்தில் அத்தொழில்களின் ஆதிக்கங்கள் எல்லாமும் பெரும் பணக்கார முதலாளிகளின் கைக்குள்ளாகவே சிக்கி விட்டன. அதனால் தொழிலாளர்கள் நூல் நூற்கும் தொழிலையும், நெசவுத் தொழிலையும் பின் பற்றித் தொழில் செய்வதில் தங்களுக்குள்ள சுதந்தரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் இழந்தனர்.

ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களும், சிறிய கைத்தொழில்களும் இப்பொழுது வர வர இயந்திரங்களினாலேயே நடத்தப்பட்டு வந்தன. பெரும் மூலதனத்தைப் பெற்றவர்கள் பல தொழிற்சாலைகளை (work shop) நிருவி தொழில்களை பல தொழிலாளர்களிடையே அங்கம் அங்கமாக பங்கிட்டுக் கொடுத்தனர். இதனால் வரவர சிறிய முதலாளிகளும் நசுக்கப்பட்டனர்.

இவ்விதமே நாகரீகமென்று சொல்லப்படும் நாடுகளெல்லாம், எல்லாக் கைத்தொழில்களையும் ஆலை (யந்திர) திட்டத்தினால் கைப்பற்றி விட்டன. இவ்விதமே சிறு கைத்தொழில்களும் உற்பத்தியும், பரந்த திட்ட உற்பத்தியால் நிராகரிக்கப்பட்டன. அதாவது எல்லாவித கைத்தொழில்களும் இப்பொழுது இயந்திரங்களால் நடத்தப்படுகின்றன. மத்திய தரப்பாரும் (middle class) அதிலும் முக்கியமாக சிறு கைத்தொழிலாளர்களும் மெள்ள மெள்ள க்ஷீணதிசை (கஷ்ட நிலைமை) க்குள்ளாயினர். தொழிலாளர்களின் ஜீவிதமே முற்றிலும் மாற்றமடைந்து விட்டது.

ஆகவே இதிலிருந்து இரண்டு புதிய வகுப்புகள் கிளம்புகின்றன. இவ்வகுப்புகள் சமூகத்திலுள்ள இதர வகுப்புகளை யெல்லாம் விழுங்கி விடுகின்றன.

அவையாவன:—

ஒன்று தற்கால நாகரீகமுள்ளதாகச் சொல்லப்படும் நாடுகளில் ஜீவாதார நிலைகளையும், அந்நிலைகளுக்கு முக்கிய அவசியமாகிய விளை பொருள்களையும் சாமான்கள் உற்பத்தி செய்கின்ற இயந்திரங்களையும், பெற்றிருக்கின்ற பணக்காரப் பெரும் முதலாளிகளாயிருக்கும்ஒருவகுப்பினர். இவ்வகுப்பினருக்குத்தான் நிரந்தர ஜீவிய வகுப்பார் (Bourgesis) பூர்ஷ்வா என்று பெயர்.

மற்றொன்று— தங்களுக்கென ஒன்றுமே அடையப்பெறாத ஒரு வகுப்பார், அதாவது தங்களுடைய குடும்ப போஷணைக்காக தங்களுடைய தொழிலின் உழைப்பை, 'நிரந்தரஜீவிய"(முதலாளி) வகுப்பாருக்குவிற்றும்அவர்களால் அடிமைகளாக்கப் பட்டவர்களுமாவார்கள். இவ்வகுப்பார் தான் தங்களுடைய உழைப்பினால் முதலாளிகளை உண்டு கொழுக்க வைக்கும், உழைக்கும் (உழைப்பாளி) (ப்ராலிடேரியன் Proletarians) ஏழை வகுப்பார்" என்று சொல்லப்படுவார்கள்.

கேள்வி:—"நிரந்தர ஜீவிய" வகுப்பாருக்கு எவ்வித நிலையில் இந்த "ஏழை" வகுப்பினரின் தொழிலானது விற்கப்படுகிறது?

பதில்:—தொழிலானது, விற்பனைப்பண்டங்களைப் போலவே ஒரு பண்டமே யாகும். ஆதலால் மற்ற பண்டங்களின் விலைகள் எவ்விதம் இயற்கை சட்டங்களுக்கு உட்பட்டு கணக்கிடப்படுகிறதோ, அதே போல் தொழிலின் விலையும் அதே சட்டங்களுக்கு உட்பட்டு கணக்கிடப்படுகின்றது. ஒரு பண்டத்தின் விலையானது சராசரியாக அந்தப்பண்டத்தை உற்பத்தி செய்வதில் செலவிடப்பட்ட பணத்தைப் பொருத்ததாக இருக்கும். ஆகவே தொ

ழில் விலையும் அல்லது கூலியும் தொழிலின் உற்பத்தி விலைக்குசமமாகும். தொழிலின் உற்பத்தி விலையென்பது ஒரு தொழிலாளி தன்னுடைய வேலையைச் சரிவரச் செய்வதற்கும், அவன் ஜீவனோடு உயிர் வைத்துக்கொண்டு இருப்பதற்கும் (அதாவது தொழிலாளி, வகுப்பு) நசித்துப்போகாமல் இருப்பதற்கும் வேண்டிய அளவு அவசியமான பொருளேயாகும். ஆகவே தொழிலாளி தன்னுடைய வேலைக்குக் கூலியாக மேலே குறிப்பிட்ட அதாவது அவனது பசிக்கு அவசியமாக வேண்டியதைத் தவிர அதிகமாய்ப் பெறமாட்டான். ஒரு வார்த்தையில் சொல்வதானால் தொழிலின் கூலியானது, தொழிலாளி ஜீவியத்தை நடத்துவதற்கு குறைந்த பக்ஷம் தேவையான பணமேயாகும்.

சில காலங்களில் வியாபாரமானது விர்த்தியடைந்தும், சில காலங்களில் குறைந்தும் வருவதால் பண்டங்களின் கிரயமும் அக்காலங்களுக்கேற்றவாறு மாறுதலடைகின்றன. அதே போல் தொழிலாளரின் கூலியும் முறையே மாறுகின்றதுண்டு.

கேள்வி:---கைத்தொழில்முறையில் ஏற்பட்ட பெரும் புரட்சி (Industrial Revolution) க்கு முன்பு தொழிலாளரின் நிலைமை என்ன?

பதில்:—ஜன சமூகத்தின் நிலைமை மாறுதல்களை அனுசரித்து தொழிலாளர்களின் ஜீவிய நிலையும் மாறிவருகின்றது. அதே போல் தொழிலாளர் வகுப்பினருக்கும் பணத்தையும், அதிகாரத்தையும் அடைந்திருக்கும் வகுப்புகளுக்கும், உள்ள சம்பந்தங்களும், மாறிவருகின்றன.

இலக்கிய (பழைய) காலத்தில் தொழிலாளிகள் கேவலம் அடிமைகளாக இருந்தனர். இதே சம்பந்தமானது முன்னேற்றமடையாத நாடுகளிலும் இன்றைய தினத்தில் (1847) அமெரிக்காவின் தென்பாகத்திலிருக்கும் மாகாணங்களிலும் இருந்து வருகிறது. மத்திய காலத்திய தொழிலாளர்கள் (உழைப்பாளிகள்) பெரும் நிலச்சுவான்தாரர்களாகிய, பிரபுக்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும், சொந்தமான ஊழியக்காரர்களாக இருந்தனர். இவ்வித சம்பந்தம் இன்றும் ஹங்கேரியிலும், போலந்திலும், ரஷ்யாவிலும், இருந்துவருகிறது. இவ்வித ஊழியக்காரர்களைத்தவிர மத்தியகால நகரங்களில் சிறு கைத்தொழிலாளிகள் இருந்து வந்தனர். அவர்களுக்கு எஜமானர்களாக நகர வாசிகள் இருந்தார்கள். இவ்வித சம்மந்தமானது கைத்தொழில் முறையில் புரட்சி ஏற்படும்வரை நீடித்து வந்தது. பின்னர் அச்சிறு கைத்தொழிலாளி பெரிய முதலாளிகளின் கீழ் வேலை செய்யும் ஒரு தொழிலாளியாக மாறிவிட்டான்.

கேள்வி:—தங்களுடைய உழைப்பினால் பெரும் முதலாளிகளைக் கொழுக்கவைக்கும் ஏழைத்தொழிலாளர்களுக்கும், அடிமைகளுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்:—ஒரு அடிமை தன்னை அடியோடு தனது வாழ்நாள் முழுதும் ஒரு எஜமானுக்கு விற்றுவிடுகின்றான். ஏழைத்தொழிலாளிகளோ தங்களை சில மணி நேரங்களுக்கும், சில தினங்களுக்கும் மாத்திரமே பிறருக்கு விற்று தங்களை அடிமையாக்கிக் கொள்கின்றனர்.

ஒவ்வொரு அடிமையும் அவனது எஜமானனின் நேர்முகமான சொந்தசொத்தாககருதப்பட்டுவந்ததால் அவனுடைய ஜீவனமானது கஷ்டமின்றி நடந்துவந்தது. அச்சீவனமானது எவ்வளவு அற்ப கேவலமாக இருந்தபோதிலும் அவனுடைய வாழ்நாட்கள் அவனுக்குஸ்திரப்படுத்தப்பட்டுவிட்டன. அடிமைக்குள்ள இந்தபாதுகாப்புகள் அவ்வடிமையின் சொந்தக்காரர்களின் நன்மைக்கே தவிர அடிமையின் நன்மைக்காக அல்ல. ஆனால் ஏழைத்தொழிலாளியின் ஜீவனத்திற்கு இவ்வித பாதுகாப்புகள் ஒன்றும் கிடைக்கவில்லை.

அடிமையானவன் விலைவாசிப்போட்டியினால் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் ஏழைத் தொழிலாளியோ அப்போட்டியினால் பாதிக்கப்பட்டு அவ்வப்போது ஏற்படும் பொருளாதார லாபநஷ்ட நெருக்கடிகளுக்கெல்லாம் ஆளாகின்றான்.

அடிமையானவன் சமூகத்தினுள்ளோர்நபராக கருதப்படாமல்கேவலம் ஒருபொருளாகக்கருதப்படுகின்றான். ஆனால் ஏழைத்தொழிலாளியோ முதலாளி (நிரந்தர ஜீவிய) வகுப்பின் ஆதிக்கத்தின் கீழுள்ள சமூகத்தின் ஒரு அங்கத்தினனாகக் கருதப்படுகின்றான்.

ஆகையால் ஒரு அடிமை ஒரு ஏழைத்தொழிலாளியைக் காட்டிலும் கீழ்தர யோக்கியதைபெற்ற ஓர் நிலையில் இருந்தபோதிலும் தன்னுடைய ஜீவனத்திற்கு ஒரு நிலையான வழிகளைத் தேடிக்கொண்டவனாகின்றான். அடிமையானவன் தனிப்பட்ட சொந்த நிலையின் ஒரு அங்கமாகிய அடிமைத்தன சம்பந்தத்தை அறுத்துவிட்டு அதனின்று 'விடுதலை' பெறலாம். ஆனால் ஏழைத்தொழிலாளியோ தான் 'விடுதலை' யடைவதற்கு தனிப்பட்ட சொத்து நிலைமையை (தனிஉடமை முறையையே) அறவே ஒழித்தால் தான்முடியும்.

கேள்வி:—ஏழைத் தொழிலாளிக்கும் ஊழிய (உழவு) க்காரனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

பதில்:—ஊழியக்காரன் ஒரு சிறு நிலத்திற்குச் சொந்தக்காரனாய் இருந்து அதை உபயோகப்படுத்தி வருகிறான். இந்நிலமானது நிலச்சுவான்தார்களாகிய பிரபுக்களிடமிருந்து அவன் அடைந்ததாகும். அந்நிலத்திற்கு பதிலாக அவன் பிரபுக்களுக்கு நிலத்தின் சாகுபடியில் ஒரு பகுதியை கொடுத்தும் மற்றும் அப்பிரபுக்களுக்குச் சில குறிப்பிட்ட நாட்களுக்கு வேலையும் செய்கிறான். ஆனால் ஏழைத் தொழிலாளியோ பிறருக்குச் சொந்தமான (உற்பத்திற்கு உதவும்) கருவிகளை வைத்துக்கொண்டு வேலை செய்கிறான். அவன் அந்த (உற்பத்திற்கு உதவியான) கருவிகளின் சொந்தக்காரனுக்கே பாடுபட்டு அவ்வுற்பத்தியின் ஒரு சிறு பகுதியையே, அவன் ஊதியமாக அடைகிறான். ஊழியக்காரன் கொடுக்கவும் அதை ஏழைத் தொழிலாளி வாங்கவும் செய்கின்றான்.

ஆகவே ஜீவனமானது ஊழியக்காரனுக்கு நிச்சயமாக அளிக்கப்படுகிறது. ஏழைத்தொழிலாளிக்கோ அப்படியில்லை. ஊழியக்காரனே பொருளாதார போட்டியாகிய வலையில் இழுக்கப்படுவதில்லை. ஆனால் ஏழைத் தொழிலாளியோ அவ்வலையில் விழுந்து திகைக்கிறான்.

ஊழியக்காரன் நகரங்களுக்குச் சென்று அங்குசிறுகைத்தொழிலாளியாக மாறியோ, அல்லது தன் எஜமானனுக்கு பண்டத்திற்கு பதிலாக பணத்தைச் செலுத்தி ஒரு சுதந்திரமுள்ள குடியானவனாக மாறியோ; தன் விடுதலையைப் பெறலாம். ஒரே வார்த்தையில் கூறுமிடத்து அவன் பலவித முறைகளால் "பணம் படைத்த கோஷ்டி"யினரோடும் சேரலாம். ஆனால்,

ஏழைத்தொழிலாளியோ வியாபாரப் போட்டியையும், தனிப்பட்ட சொத்துரிமையையும், ஒவ்வொரு வகுப்பு வித்தியாசத்தையும் அறவே அழித்தால் அல்லாது அவன் சுதந்திரம் பெற முடியவே முடியாது.

கேள்வி:—"ஏழைத்தொழிலாளி"க்கும்; கைத்தொழில் முறையில் பெரும் புரட்சி ஏற்படுவதற்கு முன்பிருந்த தொழிலாளிக்கும் உள்ள வித்தியாசமென்ன?

பதில்:—இந்தக் காலமானது 16வது நூற்றாண்டிலிருந்து 18வது நூற்றாண்டு வரையிருந்த காலத்தையே காட்டுகின்றது. அக்காலத்தில் தொழிலாளி உற்பத்திக்கருவிகளாகிய, தறி, கைராட்டை, ஓய்வு நேரத்தில் பயிரிடக்கூடிய சிறு வயல்கள் ஆகிய இவைகளைத் தனக்குச் சொந்தமாகப் பெற்றிருந்தான். ஆனால் இக்காலத்திய ஏழைத் தொழிலாளிக்கோ இவைகளில் ஒன்றுகூடக் கிடையாது. அக்காலத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் கிராமங்களில் வசித்து வந்தனர். அவர்கள் தங்கள் எஜமான்களையோ, அல்லது முதலாளிகளையோ நாட்டாண்மைக்காரர்களாகக் கருதி வந்தனர். ஆனால் தற்காலத்தொழிலாளியோ நகரங்களில் வசிக்கிறான். அவனுக்கும் அவனுடைய முதலாளிக்கும் உள்ள சம்பந்தம் பணத்தையே அடிப்படையாகக் கொண்டதாகும். பாரந்த(யந்திரத்) திட்டகைத்தொழிலால் முற்காலத்தொழிலாளர்கள் தங்களுடைய பழையசம்பந்தங்களை ஒழித்துவிட்டு ஏழைத்தொழிலாளர்களாக மாறுகின்றனர்.

கேள்வி:—கைத்தொழில்முறையில் ஏற்பட்ட பெரிய புரட்சியினால் சமூகத்தின் "நிரந்தர ஜீவிய வகுப்பின"ராகவும், ஏழைத்தொழிலாளர் வகுப்பினராகவும் இரு வகுப்புகள் உண்டாக்கப்பட்டுவிட்டதினால் ஏற்பட்ட பலாபலன் என்ன?

பதில்:—முதலாவதாக முற்காலத்திய கையினால் செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களெல்லாம் வெகு மலிவாக விற்கக்கூடிய தற்கால யந்திர உற்பத்திப்பொருள்களால் பின் தள்ளப்பட்டன. அநாகரீகமான அநேகதேய நாடுகளெல்லாம் மற்ற தேசங்களில் ஏற்பட்ட பாரந்த திட்டக் கைத்தொழில் முறை அபிவிர்த்தியினால் அவைதாங்கள் இருந்துவந்த ஓர்மூலைமுடுக்கிலிருந்துஇப்போது முன்னணிக்கு வந்துவிட்டன. பல நாடுகள் இங்கிலாந்திலிருந்து வந்த மலிவான பண்டங்களை விலைக்கு வாங்கியதால் தங்களுடைய சொந்த உற்பத்தியாளர்களை எல்லாம் நசிக்கும்படி செய்து விட்டன.

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

இந்த வருடத்து மகாமகம்

விசேட மாமாங்கமாகும்.

[கைவல்யம்.]

மாமாங்கம் முடிவடைந்தது. இந்த வருடத்துமாமாங்கம் விஷேடமானதாகும். எப்படியெனில், மாமாங்கத்தைப்பற்றின பொய்க்கதைகள், அதைப்பற்றின புராணக்கதைகளின் கற்பனை புரட்டுகள், அதற்குள் பார்ப்பார்களின் உயர்விற்கும், லாபத்திற்கும் எற்படுத்தி வைத்திருக்கும் ஏமாற்றுகள், அதற்காக ஆஸ்திகர்களை மயக்கினவழிகள், அபினயங்கள், பிரசாரங்கள், அதன்வழிகள், அதனுல்ஆஸ்திகர்களுக்கு வரும்அறியாமை, அவதி, ஆலோனைக்குறைவு, பலனில்லாமை பகுத்தறிவைப்பாழ்ப்படுத்திக்கொண்டபல வீனம் இத்தனையும் சுயமரியாதைச்சங்கம் எடுத்துச்சொல்லிற்று. அதனுலும், சமயசாஸ்திரகுருக்கள்கட்டுப்பாட்டின் ஏற்பாட்டில் ஜனசமூகத்திற்கு நம்பிக்கை குறைந்து வருவதாலும், மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம்ஒரு கூட்டத்தாரின் வயிற்றை நிறப்புவதேயல்லாமல், அதனுல் ஜனங்களுக்கு ஒரு நன்மையும் உண்டாவதில்லையென்பது தெரிந்து வருவதாலும், கோவிலைத் தெரிசித்தும், தீர்த்தத்தில் முழுகியும், காணிக்கை போட்டும், தெக்ஷணைகொடுத்தும், பிரார்த்தனை செலுத்தியும், இப்பொழுது சோற்றிக்கு வழியில்லாமல் வந்திருக்கும் தொல்லையாம் தொழிலில்லாமையாலும், கோவில் கட்டியும், கும்பாபிஷேகம் செய்தும், மானியம் விட்டும், பிராமணபோஜனம் செய்வித்தும், பூதானம், கோதானம் வழங்கியும், நன்மை ஏற்படாமல் நாணயக்குறைவே ஏற்பட்டுவருவதாலும், லோககுரு குளிக்க வென்னீருக்கு வெள்ளிஅண்டா, தீர்த்தத்திற்கு தங்க பஞ்சபாத்திரம், பாதசேவைக்கு, பல்லக்கு, சவாரிக்கு பட்டணப்பிரவேசத்திற்கு, மூக தரிசனத்திற்கு, பீதாம்பர அலங்காரத்திற்கு, பிரசாதசேவைக்கு, அதன் வினியோகத்திற்கு, ஆசீர்வாதத்திற்கு, அம்மன் பூசைக்கு, அதன் சேவைக்கு, அந்தணர் விருந்திற்கு, அங்கிருக்கும சாஸ்திரிகளுக்கு, சந்நியாசிகளுக்கு, சலுகைக்காரர்களுக்கு, ஆகியவற்றிற்கெல்லாம் அவரவர்கள் தெக்ஷணைக்குகொடுத்தபணம் மகிமைப்பணத்திலும் அடங்காமல், மதராஸ் பணத்திலும் எடுத்து வீட்டுக்குச்சில வெழுதி மண்டியிட்டுமண்மேல் விழுந்து மயங்கினமகிழ்ச்சியும், கீர்த்தியும் முகஸ்துதிகளுமெல்லாம், கோட்டுக்குள் அடமானம், அடமானத்தில் கிரயம் அதிலுமடங்காமல் இன்சால்வெண்டு பிட்டிஷனும், ஏலநோட்டீசும், வக்கீல் பீசும், சாக்ஷிச்செலவும், வந்து சூழ்ந்து அவதிப்பட்டு யாரைக் கண்டாலும் அஞ்சிப்பயந்து நிற்கும் நிலைசூழ்ந்து வருகிறபடியாலும், ஜன சமூகம் சோர்ந்து பொருளாதாரத்துறையில் புத்திகலங்கி தன்னுணர்ச்சி சிறிது தலைகாட்டத்துடங்கியிருக்கும் இந்தசமயம் கோவிலால்ப்பிழைப்பவர்களும், சமயவழக்கபழக்கங்களைக்காட்டிவாழ்கிறவர்களும், புராணக்கதைகளைக்கொண்டு காலம்தள்ளிக்கொண்டிருப்பவர்களும், சமயசாஸ்திர கட்டுப்பாட்டின் ஏற்பாட்டால் தங்கள் சமூகத்தின் மேன்மையும் லாபமும் காப்பாற்றிவரும் சாஸ்திரிகளும் நமதுசமயஉலகவாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் கொடுங்கோன்மை நடப்பதைத்தெரிந்தும் அதுவேஜனங்களுக்கு நன்மையென்று சொல்லும் உயர்ந்த ஜாதியார்களுடன் சேர்ந்துகொண்டு ராஜாங்கத்தில் கூசாமல் பரிபூரண விடுதலை கேட்பதாக நடித்து ஜனங்களின் அறியாமையை விருத்திபண்ணும் 'சுதேசமித்திரன்' பத்திரிகையும் ஒன்றுகூடினுப்போல ஒரேஉணர்ச்சியாக ஜனங்களுக்கு மாமாங்கத்தின் நம்பிக்கை குறைந்து போனுல் உயர்ந்தஜாதியின் மேன்மைக்கும் லாபத்திற்கும் வழிபோய்விடுமே என்றுகவலைப்பட்டு, கும்பகோணஉற்பத்தி, அதன்பக்கத்து ஊர்கள் படைக்கப்பட்டவிதம், கோவில்கள் உண்டானவிதம், அதற்குள் மூர்த்திகள் புகுந்தவிந்தை, அதன் மருத்துவங்கள், மாமாங்கவரலாறு, குளத்தின் உற்பவம், கன்னிகைகள் நதிகள்முப்பத்திமுக்கோடி தேவர்கள் குளத்தில் குளித்துப்பாவம் தீர்ந்த ஆச்சரியம், பாவம்தீர்ந்து கும்பகோணகோயிலில் குடிகொண்டிருக்கும் மாதிரிகள், கோவிலில்லாத பிர்மாவிற்கு கும்பகோணத்தில் கோவில் அமைந்தஅற்புதம், பிர்மபார்வதியை மோகித்து அவதிப்பட்ட அதிசயம், அந்தப்பாவம்போக பிர்மாகுளித்த பிர்மதீர்த்தம், அந்தக்குளத்தில் பிர்மா இந்திரியம் சிந்தினசேற்றுல் உண்டான பிரமகணங்கள், பொழிந்த புஷ்பமாரி, பார்வதி பிர்மாவைக்கண்டு சந்தேகப்பட்ட சல்லியம், அந்தப்பாவம்பாக பார்வதி முழுகின குமரித்தீர்த்தம், இதைக்கண்ட கைலாசநாதர் பிர்மாவின் தலையைக்கிள்ளினபராக்கிரமம், அந்தப்பாவத்தைத்துலைக்க கைலங்கிரிநாதர் முழுகின மகாதீர்த்தம், அந்தத்தீர்த்தத்திலிருந்து உண்டான பூதகணங்கள் அந்த பூதகணங்கள் பிர்மாவின் சிரசிலிருந்து சிந்தின உதிரத்தத்தைக்குடித்தவேகத்தால் உண்டான பைசாசக்கூட்டங்கள், அவைகள் போட்டசத்தத்தால் உண்டான பிரேதக்கூட்டங்கள், இவைகள் ஆடினஆட்டத்தால் காளிகள் காட்டேரிகள் தோன்றி மகாமகக்குளத்தில் குளித்ததும் தங்கள் தங்கள் பாவத்தைப்போக்கி அந்தாத்தேபோய்நின்று ஆனந்தக் கூத்தாடினதும், குருபத்தினியைக் கூடின தேவேந்திரன் பாவம்போக முழுகின இந்திர தீர்த்தம், கன்னி அழிந்ததேவப்பெண்கள், தெய்வப்பெண்கள் பாவத்தைத்தீர்த்த கன்னித்தீர்த்தம், இதற்குமேல் அக்குளத்தில் அடங்கியிருக்கும் அறுபத்தாறு கோடித்தீர்த்தத்தின் பிளான்கள், இவைகளில் முழுகி பாவத்தைப்போக்கிஇஷ்டகாரிய சித்தியும் பிள்ளைப்பேறும் பெற்று மோட்சமடைந்த ராஜாக்கள், பிரபுக்கள், முனிவர்கள் முதலியவர்களின் கதைகள், இதற்குஆதாரங்களாகப் புராணங்கள் அசரீரவாக்குகள் முதலியவைகளைக்காட்டி பக்திபத்தியாய் சுதேசமித்திரன் பத்திரிகையிலெழுதினுர்கள். சிறு புஸ்தகங்களாக எழுதியும் வழங்கினுர்கள்.

அதுவுமல்லாமல் காப்பிக்கடை சோற்றுக்கடை வீட்டுவாடகைசம்பாதிப்பவர்கள், நாடகம், சினிமா, சங்கிதக்கச்சேரி, கதாகாலக்ஷேபம், பொருள்காட்சி, முதலியவர்களின் பிரசுரம் ஒரு புறம், காமகோடி சங்கராச்சாரிதானே மகாமகப்புண்ணியஸ்தானத்திற்குப்போவதாக ஸ்ரீமுகங்களும் சென்னைவாசிகளுக்கு அறிக்கைகளும் விடுத்ததுஒருபக்கம்ஆகியவைகளினுலெல்லாம் மாமாங்கப்புராணக்கதைகள் இந்தவருடத்தைப்போலமுன்வருடங்களில் வெளியானதே இல்லைஆதலால் அக்கதைகளைப்பற்றி ஜனங்கள் சிந்திக்க ஏதுவாயிற்று.

மகாமகவரலாறு சிவசம்பந்தமான கதைகளாகவேயிருக்கும். கும்பகோணத்தைச்சுற்றிலுமுள்ள சிவாலயங்களிலுள்ள மூர்த்திகள் ரதத்தில் மகாமகக்குளத்திற்கு வந்து குளித்துப்பாவத்தைப்போக்கிக்கொள்ளும் ஆனுல் அங்குள்ளவிஷ்ணு ஆலயங்களிலுள்ள தெய்வங்களை மகாமகத்துக் குளத்திற்கு கொண்டுவருவதுமில்லை. குளிப்பதுமில்லை. தீர்த்தம் சாதிப்பதுமில்லை. வைணவர்களும் அன்றுமகாமகங்குளத்தில் குளிக்கமாட்டார்கள். அதற்கு காரணமென்ன? மாமாங்கத்தைப்பற்றின கதைகளெல்லாம் பொய்யென்றும் அவ்வளவு சக்திசிவபெருமானுக்கில்லை.என்றும்நாராயணனுக்கு சிவன்சாதாரண ஒருதேவன் தானென்றும் நினைப்பவர்கள். அப்படியே அவர்கள் சாஸ்திர புராண சித்தாந்தங்கள் கூறுகின்றன. அப்படியிருந்தும் வைணவர்களில் சிலர் மாமாங்கக்கதைகளை பக்கமிருந்து பார்த்தவர்கள் போல 'சுதேசமித்திரனில்' எழுதினதும் 'சுதேசமித்திரன்'கூடவிருந்தது போல பிரசுரித்தும் ஏனென்றுல் ஆசாரமில்லாதவன், ஒழுக்கமில்லாதவன், கண்டதைப்புசிப்பவன் சூத்திரன் என்று இதிகாசத்தில் எழுதிவைத்து அதைப்படித்துக்கேட்பதற்குப்பணம்கொடுக்கும் சூத்திர அடிமைகளைஎன்றும்மடையராகவைத்துக் கொள்ளுவதற்குள்ள ஏற்பாட்டிற்கேயாகும்.

ஒரு காலத்தில் பௌத்த சமண மதங்கள் தமிழ்நாட்டில் பரவியிருந்தன. ஜனங்களை வசப்படுத்தி அம்மதங்களை அழிக்கவே கோவில்களும் உற்சவங்களுமுண்டாக்கப்பட்டன. அதுவுமல்லாமல் பௌத்த சமணம் அழிக்கப்பட்டவுடன் சைவம் தலையெடுத்து தமிழ்நாடு தெலுங்கர் வசமானவுடன் வைணவம் ஓங்கிற்று. சைவர்களுடைய உட்பகையால் தமிழ்நாட்டில் தெலுங்கு ராஜ்ஜியம் வீழ்ந்து தஞ்சாவூர் மராட்டிய ராஜ்ஜியமாயிற்று. சைவ ஆதிக்கமும் வைணவ ஆதிக்கமும் மாறிவந்த சமயம் அவரவர்களுடைய மதங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும், மேன்மையடையவும் அறிவற்ற ஜனசமூகங்களை தன் வசப்படுத்தவும் அறிவுக்கும், அனுபோகத்திற்கும், உண்மைக்கும் ஒத்துவராத பல பொய்க்கதைகளை பலகோவில்களைக்காட்டிஸ்தல புராணமென்று எழுதினுர்கள். அந்தக் காலத்து பண்டிதர்களுக்கு அதைவிட பெருமையும் வேலையுமில்லை. புராணங்கள் பாடுவதற்கு சில ஒழுங்குகளுண்டு. அதுசரியாகவிருந்தால்போதுமானது. அதிலுள்ள விஷயம் சரியா தப்பா? உண்மையா? பொய்யா? என்பதை நினைப்பதேயில்லை, நினைக்கவும் கூடாது, அதற்கு இது ஆதாரம், இதற்கு அது ஆதாரம் என்று அந்தப்படியே இன்றுவரையிலும் நடந்து வருகிறது.

படித்தும், படித்தவன் என்கிற பெயரிருந்தும், விலைமதிப்புடைய ஆபரணங்கள், கெடியாரங்கள் அணிந்தும், நாகரீகமெனப்பட்ட ராஜாங்க உடையணிந்தும், தினமும் முகக்ஷவரம் செய்தும், சுகாதாரம் தெரிந்தும், விஞ்ஞான சாஸ்திரவியப்பை வீதியெல்லாம்கண்டும், சமுத்திரக் காற்றை விரும்பியும், கார் சவாரியை அனுபவித்தும், காலேஜ் முத்திரை வாங்கியும், அறிவின் விருத்தியின் உபன்யாசங்கள் கேட்டும், உலகத்தில் உயர்ந்த சமூகங்கள் வாழ்வதை நோக்கியும், கால சக்தியின் தூதாக ஐரோப்பிய ஜாதி நம்நாட்டிற்கு வந்ததை அறிந்தும், ஒவ்வொரு காலத்திலும் மனுஷியஜாதி கற்றுக்கொள்ளும் பெரிய உண்மைகளாகிய செல்வம் உலகத்து நாடுகளிலெல்லாம் குவிந்துகிடப்பதைக்கேட்டும், சமய சாஸ்திரவாதக் கொள்கைகளெல்லாம் தற்கால அறிவின் ஆராய்ச்சியால் அமுங்கிப்போகிறதை நினைத்தும், புரோகிதர்கள் சமய ஆச்சாரிகள் ஒன்று சேர்ந்து யோசனைபண்ணி நாம் என்றைக்கும் பிரிவுபட்டுஇருக்க வழிகள் தேடிவைத்திருப்பது நமது நாட்டில் அனுபோகமாகவிருந்தும், சர்வசாதாரணமாக எல்லாரும் வழங்கத்தக்க உரிமைகளுக்கு உயர்ந்த ஜாதிக்காரர்கள் சிறப்புரிமையென்

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

தென்னிந்திய செங்குந்தர் 4-வது மகாநாடு, திருவாரூர்.

மகாநாட்டின் திறப்புவிழாவாற்றிய புதுவை தோழர் ஆ. வே. முத்தையா சொற்பொழிவு.

முதன் முதல் ஈரோட்டில் மகாநாடு கூட்டிய பின்னர் இரண்டாவது காஞ்சியிலும், மூன்ருவது சென்னையிலும், நிகழ்ந்த காலையில் இவைகளுக்கு யான் வர முடியாததை ஆங்கு குழுமியிருந்த நண்பர்கள் பலர் குறைவாகவோ குற்றமாகவோ கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு சமாதானம்சொல்லவும். அனேகதடவைகளில்பலவிடங்களில்கடவுள்பற்று, சமயப்பற்று, இவைகள் சம்பந்தமாக எனது சொந்த ஆராய்ச்சி அபிப்பிராயங்களை வெளியிட அவைகளுக்கு பல நண்பர்கள் விபரீதப்பொருள்கொண்டுள்ளார்கள். அன்னோர்களுக்கும் எனையவர்களுக்கும், என்னுடைய நோக்கங்கள் இன்னவைகள்தான் என ஒருவாறு குறிப்பிட்டுக் காட்டவும். இதுவே நல்லதருணம் என்பதாக நினைத்து இத்திறப்புவிழாவாற்ற ஏற்றுக்கொண்டேன்.

அன்றியும் பழைய நூல்களில் கண்டிருப்பதை கொஞ்சம் தெரிந்து ஆராய்ந்தபோது இவ்வூரில் நிகழ்ந்ததாகச்சொல்லியிருக்கும் பல சம்பவங்கள் மனதில் ஒரு ஆழ்ந்த உணர்ச்சியையும் உண்டாக்கின.

அடியுந்தெரியாது முடியுந்தெரியாதென்று சொல்லப்பட்டும் கருதப்பட்டுமிருக்கிறவோர் தனிப்பொருள் மானிடனுகவந்து "மனிதனே மனிதனுக்கு உறுதி" என்பதை விளக்கிக் காட்டுவான்போல் அருந்தோழனுக விருந்தும் தோன்றுந்துணைவனுகப் பக்கத்தில் நின்றும் தன் நண்பனுக்கு நேர்ந்த வாழ்க்கை இன்னல்கள் பலவற்றை நீக்கியுள்ளது. இவ்வூரிலல்லவா வென்பதை உன்னுந்தோறும் பெருமித மகிழ்ச்சியுண்டாகிறது.

இக்காரணம்பற்றியும் இதுசமயம் ஆரூருக்கு யானேவரவிருந்தபோது வரவேற்புக்கழகத்தவரும் என்னை வரும்படிகோரியது கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோலாற்று.

எனவே குலநண்பர்கள் அனைவருக்கும் முக்கியமாக இவ்வூர் நேயர்களுக்கும் நன்றி பாராட்டுகிறேன்.

உடல்பற்று என்னிடம் மிகவும் உண்டு. தேகநிலையை அதிகமதிமாகக்கவனித்துப்போற்றிவரும் எனக்கு அந்நிலை சற்று தளர்ந்தோ அல்லது தேகம் நோய்வாய்ப்பட்டோ இருக்கும் சமயங்களில் படித்த பாடங்களையெல்லாம் மறந்துபோய் பொதுக்காரியங்களினின்றும் சற்று விலகியிருப்பது எனது பழக்கமாய் விட்டது. இதுசரியோ பிழையோ வென சந்தேகமாய் மெழுகிவிட யான் துணியமாட்டேன். தப்பை தப்பென்றே சொல்லவேண்டும். உடல்மீது அதிக வாஞ்சைவைத்து அதன் நிலையொன்றையே முக்கியமாகக் கவனிப்பது தவறுதலேயாகும். இந்த முறையில் காஞ்சிமகாநாட்டாருக்கு யான் அபராதம் இயற்றியுள்ளவனுகவிருக்கிறேன்.

இரண்டாவது பொருளிலும் மதிப்பிலும் எனக்குப்பற்றில்லாமலில்லை யான் ஈடுபட்டு செய்துவரும் தொழில் முறையானது ஒருதடவையல்ல பலதடவைகளிலும் ஒருவழியிலல்ல பலவழிகளிலும் எனது நோக்கங்கள் நிறைவேற்றிக்கொள்வதற்கு இடைஞ்சலாகவே நின்றுவருகிறது. இதனுலும் விசேஷகாலங்களில் குறிப்பிட்ட விழாக்களில் சகோதர நேயர்களைக்கண்டுகளிக்க முடியாமல் போய்க்கொண்டிருக்கிறது. அலுவலிலிருக்கின்ற ஓர் மதிப்பு எங்கே குறைந்துவருகிறதோ? அலுவலுக்குத்தான் எங்கேஆபத்துவிளையுமோ? வருமானப்பொருள் எங்கே குன்றிவிடுமோ? வென்ற ஐயப்பாடுகள் மனதில் அடிக்கடி குடிபுகுந்துவிடுவதால் சில சில முக்கிய சமயங்களில் வெளியேறுவது முடியாமற்போய் விடுகிறது. இந்த முறையிலேதான் சென்னை நண்பர்களுக்கு யான் அபராதம் இயற்றியுள்ளது.

இவ்வகையாக உடலிலும் பொருளிலும், புகழிலும் எனக்குள்ள மூடப்பற்றுகளை அதிகமான பற்றை அகற்றும் ஆற்றலில்லாக்குறையால் யானிழைத்த குற்றங்களைத்தாங்க எல்லோரும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இனிகடவுளைப்பற்றியும், சமயத்தைப்பற்றியும் யான் சொல்லியுள்ளவைகளை எழுதியுள்ளவைகளை நன்காராயும்படி நண்பர்களை மன்றாடுகிறேன். குற்றங்காணவேண்டுமென்ற முன்னெண்ணமின்றி நிதானமாக ஆழ்ந்து ஆராய்ந்து பார்ப்பீர்களேயானுல் நியாயத்திற்கும் ஒழுக்க முறைக்கும், அன்புவழிக்கும் முறணுகவிராது என்பதுஎன் அபிப்பிராயம். பழக்கவழக்கங்களுக்கு விரோதமாகவிருக்கலாம். சாதிசமயம் போலிய பிமானங்களுக்கு எதிராகத்தோற்றும் உண்மைக்கும், யுக்திக்கும் விரோதமாகவிராது. பிறரை ஏமாற்றவோ, கெடுத்துவிடவோ, எண்ணங்கொண்டதாயிராது. என்னுடைய சிற்றறிவுக்கெட்டிய வரையில் நன்குணர்ந்து என்னையே யான் ஏமாற்றிக்கொள்ளாமல் வெளிப்படையாகச்சொன்னதெல்லாம், சொல்லுவதெல்லாம் ஒரு பெரும் உண்மையை ஆதாரமாகவுடையதேயாகும். அதாவது

"பொதுவகையில் உயிர் வருக்கங்களெல்லாம், சிறப்புவகையில் மனித வருக்கம் முழுதும் பெரியதோர் குடும்பமாகும். இதிலுள்ள அங்கத்தினர் யாவரும் சகோதரர் உரிமையுடையவர்கள் அதுமாத்திரமல்ல. ஒவ்வொருவரும் முழுமைக்கும் மற்றெல்லோருக்கும் உத்தரவாதமும் ஏற்றவர்களே"

இந்த அடிப்படையானதோர் உண்மை உலகிடை இப்போதைய நிலையில் நன்கு உணரப்படுகின்றதில்லை. ஆனுல் இதை மனித வாழ்க்கையில் அமைப்பதற்காகவே தெரிந்தோ, தெரியாமலோ, பலபல இயக்கங்கள் வழிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றன. உலக சரிதையிலும் எத்தனையோ பெரியார்கள், சமயங்களென்றும் சமய சீர்திருத்தங்களென்றும், சமூக ஒழுக்க முறைகளென்றும், அநேகவிதமாக ஆராய்ந்து வெளியிட்டு இதை அனுஷ்டித்துக்காட்டியும் போய்விட்டார்கள். ஆனுல் அவ்வித ஏற்பாடுகளெல்லாம் சிலகாலமே நேர்மையாக நடந்தனவேயன்றி பின்புவெகுவிரைவில் மாறிவிட்டன.

எந்த வழியில் சென்ருல் உலக முழுதும் நன்மைபெறும்? எந்த முறை அநுஷ்டானத்தில் வந்தால் உலகத்திலே தீமையென்பது அறவே அழிந்துவிடும் என்ற இந்த இரண்டு பெரும் கேள்விகளுக்கும், இவைகளை ஆதாரமாகவுள்ள இடைக்கேள்விகளுக்கும் இன்னும் சமாதானம் தேடிக்கொண்டு தானிருக்கின்ருேம். தேடிமுடிவடைந்தோமில்லை.

இப்போதைய நிலையோ? எங்கு பார்த்தாலும் கிளர்ச்சியும், எதிர்ப்பும் குழப்பங்களுமாகத்தான் காணப்படுகின்றது. அமைதியென்பது அருமருந்தாய்விட்டது தன்னலம் தலைவிரித்தாடுகின்றது. நவநாகரீகத்தால் நன்மையடைந்துவிடலாம். அடைந்துவிட்டோமென்று நினைத்தவர்கள் சொன்னவர்களே இன்று எங்கும் நிகழும் நெருக்கடியைப் பார்த்து இந்த நவநாகரீகந்தான் இப்போதைய கஷ்ட நிலைக்கு காரணமெனச்சொல்ல மெதுவாக ஆரம்பிக்கின்ருர்கள்.

இவைகளையெல்லாம் சற்று நிதானமாக நோக்குவதோடு நம்மையே நாமும் பரிசீலனை செய்துபார்த்தோமேயானுல் நமது உத்தரவாதம் புலப்படாமற்போகவில்லை. உலகிடை, சமூகத்திடை, நிகழுந்தீமைகளுக்கு குழப்பங்களுக்கு நாமும் பங்காளிகள்தான். நம்மிடத்திலே நமதுமனதிலே நம்மொவ்வொருவருடையமனதிலே தீமையுங்குழப்பமுமிருக்கின்றபடியால்தான் உலகிலேஇன்னலும் இக்கட்டுகளுமிருக்கின்றன. இதை விட்டு விட்டு "உலகத்தை சமூகங்களை நேர்மை செய்து விடுவோம்" என்பதாகப் பற்பல வெளி முயற்சிகள் செய்வதெல்லாம் முழு நற்பலனைக் கொடுக்குமோ வென்பது சிந்திக்க வேண்டிய விஷயமே.

தூய மனதோடும், தெளிந்த அறிவோடும் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு வெளித்துன்பங்கள் இடைஞ்சல்களாக நிற்க வில்லை யென்பது பண்டைக்காலத்து அனுபவ மாத்திர மல்ல; இப்போதைய அனுபவமுமாகும்.

புத்தி தெளிவானது இயற்கை அச்சத்தை விளக்குகிறது. மனத்தூய்மையானது தைரியமளிக்கின்றது. ஆகையால் நமக்கு வரும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் அவைகள் நம்மிடம் பொருந்துவதற்கும், நம்மிடமிருந்து நீங்குவதற்குக் காரணம் நாமே யென்பதை அதாவது நம்முயற்சியால் அல்லது முயற்சிக் குறைவாலென்பதை. ஒருவாறு யூகிக்கலாம். ஆனுலிந்த யூகத்தின்படி அநுஷ்டித்துப் பார்த்தாலன்றி அதன் உண்மை தெரிகிறதில்லை.

அப்படிச் செய்து பார்க்கவோ நமக்கு நேரமில்லை. நமது யுகம் நமது உலகம் பரபரப்புடன் ஓடிக்கொண்டிருக்கின்றது "கும்பலில் கோவிந்தா" வென்பதாக நாமும் நம்முடைய மூட்டை முடிச்சுகளை வலிய கஷ்டப் பட்டு இழுத்துக் கொண்டே பின்னே ஓடுகின்ருேம். அன்றி, ஏன் ஓடுகின்ருேம்? எங்கே ஓடுகின்ருேம்? என்ற கேள்விகள் நம் மனதிலுதிக்கிறதில்லை, உதிக்க வழியுமில்லை. ஏன்? ஒரு மயக்கமானது நம் தலையைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. என்ன மயக்கம்? "மற்றவர்கள் எப்படியானுலு மாகாட்டும். எனக்கு கிடைத்துவிட்டால்போதும் என்றமயக்கந்தான்".

பிறருடையஇன்னலும்துன்பமும் என்னுடையது தானென்ற தெளிவு உதிப்பதற்கு சொந்த ஆராய்ச்சிசெய்யவோ நேரமில்லை இருக்கின்ற நிலையோஅது எவ்வளவு சீர்கேடாயிருந்தாலும் அதுவேபோதும், முன்னே போனுல், உள்ளதும் போய் விடுமே! என்னும் இருளச்சம் நம்மை மிரட்டுகிறது.

இந்த அச்சத்தை தவிர்ப்பதற்காகவே, தற்காக கருவிகளாக பல பல சமயங்களெழுந்தன வென்று நினைக்கிறேன். ஆனுல் அவைகளே அந்த அச்சத்தை மிரட்டலை அதிகமாக மக்களிடை நிரப்பி விட்டன.

உடலுக்கு நலந்தர வேண்டிய பாலானது முறிந்து கெட்டு விட்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அம்மியும் நகரும்!

(பாரதிதாசன்.)

"அடிமேல் அடி அடித்தால்அம்மியும்நகரும்" அல்லவா? சுயமரியாதைக்காரர் கூச்சல் வீணாகுமா? இது வரைக்கும் வீணாயிற்றா? சுயமரியாதை இதுகால பரியந்தம் என்ன செய்து விட்டது என்று கேட்பவர் சுயமரியாதைக் காரரின் விரோதிகள் என்பதும் கண்டோமல்லவா? மேலும் ஈமதியக்கத்தை எதிர்க்கும் பல பத்திரிகைகளின் போக்கும் சுயமரியாதைச் சாயையுடையனவாக ஆகிவருதலை அறிஞர் நுணுகி அறிவாரல்லவா? மக்கள் சுபாபத்தின் எதிரொலி சுயமரியாதைக் கூச்சல் என்பது மறுக்கக் கூடிய தல்லவே. மக்களின் உள்ளக்கிடக்கை என்னும் நெருப்புக்குச் சுயமரியாதை ஊதுகுளாயாம் என்ற உண்மையைச் சுயமரியாதைக் காரனைவிட ஆஸ்திகர் அதிகமாய் அறிந்துள்ளார். ஆகையால்லவா அவர்கள் அடிவயிற்றைப் பிசைத்துகொண்டு ஐயோ! என்று அலறுகிறார்கள்.

ஓடிக்கொண்டே இருக்கும் ரெயில் உட்கார்ந்திருக்கும் ஒருவன், தான் ஏறிப்போகும் ரயிலுக்குச் சக்கரமில்லை என்று சொல்லவே மாட்டான். ஆயினும் மனச்சாட்சியை மறைத்துப் பொய் சொல்ல நினைப்பவன் அவ்வாறு கூறவும் கூடும் அல்லவா? அதுபோலவே ஐந்து புலன்களாலும் சுயமரியாதையையே அடைந்து தன்னில் மாற்றமடைந்துவரும் ஆஸ்திகரும், ஆஸ்திக வால்களும் சுயமரியாதையைப் பொறாமை காரணமாக எதிர்க்கத்தான் கூடும், எதிர்த்து எழுதத்தான் கூடும்; எதிர்த்துத் திட்டத்தான் கூடும். நம் கடமை என்ன? அடிமேல் அடிஅடிப்பதுதான்.

புராணகதா காலக்ஷேபம் செய்யும் சுய நலக்காரர்கள் தமது காலக்ஷேபத்துக்கிடையில் சுயமரியாதைக்காரரை இழுத்துப் பேசாவிட்டால் சரிப்படுவதில்லை. ஆயினும் அதே உள்ளத்தில் தமது முட்டாள் தனமும் பிரதி பலிக்கத்தானே செய்கிறது. இதற்கு வருந்தலாமா? நம் கடமை என்ன அடிமேல் அடிப்பதுதான். புரோகித நாய்கள் சுயமரியாதைக் காரனைக் குலைக்காவிடில் திருப்தி படுவதில்லை. அவர்கள் குலைப்பதின் மற்றொரு புறத்தைத் திருப்பிப் படித்துக் கொள்ளும் சக்தி பொதுமக்களுக்கு இல்லாமற் போகவில்லையே. சங்கராச்சாரிகள் என்பவர்களின் பழைய பேச்சுகளின்பிரதிகள் இருந்தால் எடுத்துப் பாருங்கள். இப்போது குளறுவதையும் கவனியுங்கள். இப்போதைய பேச்சுக்களில் "ஐயோ எங்கள் கதி அநியாயமாகப் போகிறதே" என்ற மறை பொருள் தான் கிடைக்கும். சங்கராச்சாரி சுமரியாதைக்கு எதிர்ப் பிரசாரம் பண்ணுகிறாரே என்றால் அதனால் என்ன முழுகிப் போய்விட்டது. சாகப் போகிறவன் சத்தம்போட்டுச் சாவதாலும், மறையும் காற்று மாட்டுக் கொட்டலை இடிப்பதாலும் என்ன பிரமாதம் வந்து விடப்போகிறது? கூச்சல் அதிகமாகவே யிருக்கும் அதிலும் இன்றைய நிலையில் கூச்சல் மிக்க அதிகமாயிருக்கும். ஆனால் நிச்சயமாயிருந்த அதிகக் கூச்சல் நமது வேலையிற் பாதியைப் பங்கிட்டு கொள்ளும்.

சுயயமரிதையின் புதிய திட்டம் செய்யத் துவக்கியிருக்கும் வேலையின் ஒளி சுவாலை கண்ணுக்குப் புலனாகத் துவக்கவில்லை. எதிரிகளின் குமறல்கள் அதிகமாயிருக்கிறது என்பது சிலர் கருத்து. புதிய திட்டம் துவக்கி வெளிவந்த மறுதினமே செல்வர்கள், புரோகிதர்கள், மாடாதிபதிகள் மூளையில் உழுவுத் தொழில் நடைபெறுவது மறுக்க முடியுமா?

10000, 5000, 2000, 1000 என்ற முறையில் சம்பளம் வாங்கிறவர்கள் 10, 20 சம்பளம் வாங்கும் ஏழை உத்தியோகஸ்தர் விஷயத்தில் காட்டியமனப்பான்மை மாறுபட துவக்கி இருக்கிறது. பெரிய சம்பளக்காரர்கள் ஏழை மக்களை ஒடுக்கி வருவதற்காக நமக்கு இத்தனை சம்பளம் கொடுக்கப்படுகிற தல்லவா என்று உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஏழைகளும், அந்த அதிகப் படியான சம்பளத்தைக் கோணற் பார்வை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். மடாதிபதிகளின் அட்டகாசம் ஏழைகள் கண்ணை உருத்த ஆரம்பித்து விட்டது. மடாதிபதிகளும் அஞ்சுமுகம் தோன்றில் ஆறு முகம் தோன்றும் என்று சுப்பிரமணியர் துதி ஆரம்பித்திருக்கிறார்கள். பெரிய மிராசுதார்களின் குமறல்மனைக் கொண்டே படிக்கத் தெரியாத உழவர்கள் விஷயம் தெரிந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். நாள் முழுதும் உழைக்கும் நமக்குக் கூலி ஆறணாவாம். சோம்பேரி மிராசுதார்களுக்கு மார்பில் சந்தனமாம் என்பன போன்ற உத்வேமான சண்ட மாருதம் தலைகாட்டிவிட்டது, "இந்த நிலையில் சுய ராஜ்யம் வந்தால்அதுபணக்காரர்களுக்கும்புரோகிதக்கூட்டத்தார்களுக்கும், மடாதிபதிகளுக்கும், ஜமீன்தார்களுக்கும் நல்லதே தவிர, ஏழைமக்கள் என்ற பெரும் பான்மையோர் நிலையில் எள்ளத்தனை மாறுதலும் இராது என்பது ஜனங்களுக்குத் தெரிந்தே வருகிறது. இதன் உண்மை சமீபத்தேர்தல் சமயத்தில் தெரியத்தான் போகிறது.

வட்டியில்லாமலும், ஏழைகட்கு எள்ளின் மூக்கத்தனை பயனில்லாமலும் சுமார் ஆயிரம்கோடி ரூபாய்கள் கோயில் பேராலும் குருக்கள் பேராலும், மதத்தின் பேராலும் வீணாய்க் கிடக்கின்றனவாமே! அடடா அர்த்தப்பணங்கள் எல்லாம் இருந்தால் ஏழைமக்களே இல்லாமல் எல்லாரும் உண்ண உணவுக்கும், உடுக்க ஆடைக்கும், ஒண்டக் குடிசைக்கும் கஷ்டமின்றி வாழலாமாமே! மெய்தானடா அண்ணே. சுயமரியாதைக்காரர் சொல்லுவதுபோல் இந்தக் காமாட்டிப் பசங்கள் ஏழைகளைத் தினந்தினம் ஏமாற்றி ஏமாற்றி எப்படியோ பணத்தைச் சேர்த்தார்களே ஒழியப் பாடுபட்டதும் இல்லை, படுவதுமில்லை, படப்போவதுமில்லை என்ற பெரும் பான்மை ஏழைமக்களின் அபிப்பிராயம் யாருக்கு அநுகூலமானது? ஆஸ்திகர்களுக்கு அநுகூலம் செய்யுமா? மடாதிபதிகட்கு அநுகூலம் செய்யுமா? ஜமீன்களுக்கு அநுகூலம் செய்யுமா? நமது கடமை என்ன? மேற்படி அபிப்பிராயங்களுக்கு வத்திவைத்துக்கொண்டே யிருக்கவேண்டியது தானே. முதலாளிகள் அம்மிகளாயிருக்கட்டும். புதைத்த செக்குகளாயிருக்கட்டும். வேர்விடுமா? நகர்ந்து தானே தீரவேண்டும்.

தேசியத்தைப் பார்த்தார்கள். அந்தத் தேசியத்தை முன்னின்று நடத்திய தேச பக்தர்களைப் பார்த்தார்கள். ஏழைமக்கள் என்னமுடிவுக்கு வந்தார்கள் கீர்த்தியோ, லாபமோ பட்டங்களோ, அனைத்தும் முதலாளிகட்கும், பழைய மண்வெட்டியும் கூடையும் ஏழைகட்கு ஏற்படுவதை அறியாமலா இருக்கிறார்கள். தேசபக்த பத்திரிக்கைகள் சி. பி. சாமியின் தியாகம், என்று கொட்டை எழுத்தால் போடட்டும், வாசிக்கும் மனிதர்கள் அதை இப்போது நேராக வாசிப்பதை விட்டுத் தலைகீழாகப் புரட்டிச் சி. பி. அவர்கள் முன்பெல்லாம் 1000 ஏழையர் ரத்தத்தை உண்டு வந்தார். இப்போது பதினாயிரம் ஏழைகளின் ரத்தத்தைப் புனல் வைத்துச் சாய்த்துக் கொள்ளுகிறார் என்றுதானே வாசிக்கிறார்கள்.

அஞ்சுதல்வேண்டாம்! பின் செல்லவேண்டாம்! ஜயம் உண்டு! நம் கடன் இடையறாது பணியாற்றலே.

திருச்சி சமபந்தி போஜனம்

மாலைப்பொதுக்கூட்டம்.

திருச்சி சமபந்தி போஜனக் கமிட்டியாரால் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி நேற்று இரவு 8 மணிக்கு முனிசிபல் சத்திரத்தில் 250 பேர்களைக் கொண்ட சமபந்தி போஜனம் நடந்தேறியது. விருந்திற்கு வேளாளர், முதலியார், நாயுடு, பிராமணர், கிறிஸ்தவர், ஆதிதிராவிடர், மகமதியர், தீண்டப்படாத கிறிஸ்தவர், முத்திரியர், செட்டியார், சைவர், வைணவர், ஆகியவகுப்பார்கள் வந்திருந்தார்கள். ஏற்கனவே விற்கப்பட்ட 250 போஜன டிக்கட்டுகள் போதாமல் மேலும் 150 டிக்கட்டுகள் தேவைக்கு கொடுக்க வியலாது போயிற்று. அன்று மாலை 6 மணிக்கு சத்திரத்திற்கு பக்கத்திலுள்ள மைதானத்தில் தோழர் எஸ். நீலாவதியம்மையார் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. ஷை கூட்டத்தில் தோழர்களான ராம சுப்பிரமணியம்' ஜே. எஸ். ராமானுஜம், பி. ஏ. பி. எல்., தி. திரவியம், கிருபாநிதி, ராஜமாணிக்கம், சன்னாசி, சமதர்மானந்தம், ச. ம. சி. பரமசிவம், பர்னாண்டஸ், சுப்பிரமணியம், சாமுவேல், கே. என். வாசுதேவன் ஆகியவர்களால் கிக்கண்ட தீர்மானங்கள் பிரரேபித்து ஆதரித்து நிறைவேற்றப் பட்டது.

தீர்மானங்கள்.

1. தீண்டாத வகுப்பினருக்கு உண்மையுடன் உழைத்து வந்த சிவகங்கை தோழர் எஸ். ராமசந்திரன் அவர்கள் உயிர்நீத்தமை குறித்து இக்கூட்டம் வருத்தத்தைத் தெரிவிக்கிறது.

2. வடஆற்காடு ஜில்லா வேலூர் போலீஸ் பயிற்சி சாலையில் பிராமணர், தெலுங்கு பிராமணர், மகமதியர் ஆகிய மூன்று வகுப்பாக ஜாகை, சாப்பாடு இருந்து வந்ததை தற்போது பிரின்சிபாலாக இருக்கும் தோழர் எச். ஜீ. பர்னஸ் அவர்கள் ஒரேஜாகை ஆக்கி சமபந்தி போஜனமாக ஏற்பாடு செய்து அதற்கு இஷ்டமில்லாதவர்கள் வேலையை விட்டு விடலாமென்று தீர்மானித்து நடத்திவருவதைப் பற்றி தோழர் பர்னஸுக்கு இக்கூட்டம் நன்றிசெலுத்துகிறது.

3. மேல்நாடுகளுக்கு பிரயாணம் செய்து திரும்பிய தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு ஓர் வரவேற்பு ஏற்பாடு செய்வதாக இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

4. தென்னிந்தியாவுக்கு திலகமென விளங்கு பவரும், சுயமயாதை இயக்கத்தை தம் கொள்கையாகக் கொண்ட வருமான தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் இந்திய சட்டசபை தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டமைக்கு இக்கூட்டம் மகிழ்ச்சியடைவதாக தீர்மானிக்கிறது.

5. நான்காவது சுயமரியாதை மாகான மகாநாட்டை திருச்சி நகரிலேயே நடத்த நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இரவு 9-30-மணிக்கு வந்தனம் கூறப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

(ஒரு நிருபர்)

"சுதந்திரசங்கின்" ஜாதிப்புத்தி.

"சுதந்திரச்சங்கு" ஆசிரியரே!

நீர் வகுப்புவாதியா? தேசியவாதியா?

(ஸ்ரீவில்லிப்புத்தூர்—ஞ. பி. ஞானதேசிகம்)

11-3-33ல் வெளிவந்த சுதந்திரச் சங்கு பத்திரிகையில் "செட்டிக்குச் சுக்கிரதசை" என்ற தலைப்பின் கீழ் தோழர் ஆர். கே. ஷண்முகத்தைப் பற்றி எழுதியுள்ள வியாசத்தைப்பார்க்க நேரிட்டது. உடன் எப்பொழுதும் ஏற்படாத ஓர் புதிய உணர்ச்சி நமக்குண்டாயிற்று. அதில் தோழர் ஷண்முகம் அவர்களை எவ்வளவு அற்பமாகவும் கேவலமாகவும் எழுத முடியுமோ அவ்வளவும் எழுதப்பட்டிருந்தது. இந்திய சட்டசபைத் தலைவர் இராஜினாமாச் செய்து விட்டதால் அவருக்குப்பதில் ஒரு தலைவரைத் தெரிந்தெடுக்க வேண்டியதிருக்கிறது. அதற்கு, இதுவரை உபதலைவராக இருந்த தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தலைவராக தெரிந்தெடுக்கப் படுவது இயற்கையே. தோழர் ஆர். கே. எஸ்., அவர்கள் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப் படும் பொழுது போட்டியன்னியில் ஏகோபித்துத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இந்திய சட்டசபை அங்கத்தினரானது முதல் சபையில் அவருடைய பிரசங்கங்களைக் கவனித்தவர்களுக்கு அவரது அறிவின் மேன்மையையும் அவருடைய திறமையையும் எவருக்கும் அஞ்சாமல் தன் அபிப்பிராயத்தை வெளியிடுவதில் அவருடைய தீரத்தையும் பற்றி நாம் கூறவேண்டுவதின்று. தோழர்கள் லாலா லஜபதிராய், மோதிலால் நேரு, எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார், பண்டித மாளவியா, ரெங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் சட்டசபையில் அங்கத்தினர்களாக இருக்கும் பொழுது கட்சித்தலைவராக பண்டிதமோதிலால் நேரும், கட்சிக்குரடாவாக தோழர் ஆர். கே. ஷண்முகம் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தோழர் அவர்கள் உயரிய பதவியைப் பெறத்தக்க யோக்யதையுடையவர் என்பதை நாம் கூறாமலே தெரிந்து கொள்ளலாம். அச்சமயம் ஆஸ்திரேலியாவில் நடந்த ஒரு மகாநாட்டுக்கு இந்திய சட்டசபையினின்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளிருவரி லொருவராகிய லாலா லஜபதிராய் அசந்தர்ப்பத்தால் போகமுடியாத நிலைமையில் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவருக்குப் பதிலாக சட்ட சபைமூலம் இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்று அவ்விடம் செய்த உபன்யாசங்களில் இந்தியாவின் குறைபாடுகளை எவ்வளவு ஆணித்தரமாக அச்சமின்றி எடுத்துரைத்திருக்கிறார் என்பதை அச்சமயம் பத்திரிகை படித்தோர் அறிந்திருக்கலாம். அதேசமயத்தில் "சுதந்திரச்சங்கின்" ஆசிரியரின் இனத்தவராகிய தோழர் டி. ரெங்காச்சாரி ஆஸ்திரேலிய சென்று பிரிட்டிஷாரை எவ்வளவு புகழ்ந்து அரசன் விஷ்ணு அவதாரமென்றெல்லாம் பேசியிருக்கிறார் என்பதையும் கவனிக்க வேண்டுகிறோம். லாலாஜி மோதிலால் நேரு முதலிவர்கள் தன்னுடன் சட்ட சபையில் அங்கத்தினராயிருக்கும் பொழுதே தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் எவ்வளவு கௌரவிக்கப் பட்டிருக்கிறார் என்பதைத் தெரிந்தவர் கட்கதிகம் கூற வேண்டுவதில்லை. தோழர் அவர்களைப் பற்றி எழுதுவதானால் வியாசம் நீண்டுவிடும். எப்படியும் இந்திய சட்டசபைக்கு தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. "சுதந்திரச்சங்கு" ஆசிரியர் யாரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார் என்று நாம் இப்போது அவரைக் கேட்கிறோம். இதுவரை ஒரு முஸ்லீம் தோழர் இருந்தாய்விட்டது. ஒரு வெள்ளையரைத் தேர்தெடுக்க வேண்டுமென்று நினைக்கிறாரா? அல்லது தன் இனத்தி லொருவரை நியமனம் செய்ய வேண்டுமென்று நினைக்கிறாரா? ஒரு ஸ்ரீனிவாச சாஸ்திரியோ, ஒரு சி. பி. ராமசாமி அய்யரோ, ஒரு சிவசாமி அய்யரோ. ஒரு அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரோ, ஒரு சத்தியமூர்த்தியோ, ஒரு இராஜகோபாலாச்சாரியோ, ஒரு ரெங்காச்சாரியோ, ஒரு ரெங்கசாமி அய்யங்காரோ வருவதாயிருந்தால், 'சுதந்திரச்சங்கு' ஆசிரியர், ஒன்றுஅத்தகையார் நியமனம் பற்றி வானமளாவப்புகழ்ந்தெழுதுவார் அல்லது ஒன்றும் எழுதாமல், தேள்கொட்டிய திருடன்போல் இருந்து விடுவார். அதைவிட்டு "சண்டெலியின் குரல்" "தலைமைப்பதவி இந்த நிலைமைக்கு வரவேண்டுமா" "நல்லபிள்ளையாயிருந்து சர்க்காருக்கு வால்பிடித்ததற்குச் சரியான சன்மானம்" "இவர்மீது பொதுமக்களுக்கு என்ன அபிப்பிராயம் ஏற்பட்டு விட்டதென்பதை விவரிக்கத்தேவையில்லை" "இராஜீயத்துக்கும்சரி எந்த உலக விவகாரத்துக்கும்சரி அவர் ரொம்பச்சின்னவர் கன்றுக்குட்டி என்பதே பலரது அபிப்பிராயம்" என்பனபோன்ற அற்பத்தனமான இழிதன்மையான பார்ப்பன சின்னஜாதிப் புத்தியான வார்த்தைகளாலாகிய வாக்கியங்கள் எழுதப்படலாமா வென்று சுதந்திரச்சங்கு வாசிக்கும் பார்ப்பனரல்லாத தேசீயவாதிகளைக்கேட்கின்றோம். இதுவரை, எந்த உத்தியோகத்திற்கும் பார்ப்பனர்களேமுதலில் வருவதும, வெகுகாலத்துக்குப்பின பலவித இடையூறுகளுக்கிடையே பார்ப்பனரல்லாதாரிற் சிலர் அவ்வுத்தியோகங்களுக்கு வருவதும் பிரத்தியட்ச அனுபவம் அதேபோன்று இந்தியசட்டசபைத் தலைவராக ஓர் பார்ப்பனர் வராமல் பார்ப்பனரல்லாத தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள்வருவதாயிருந்தால் சுதந்திரச்சங்கின் ஆசிரியரது மனம்துடிக்காமல் என்ன செய்யும்? ஆகவே அவர் இவ்வாறெழுதுவதினின்றும் ஷை சுதந்திரச்சங்கை வாசிக்கும் பார்ப்பனரல்லாதாரை எவ்வளவு துாரம் மடையர்களென்று அவர் கருதியிருக்கிறார் என்பது வெளியாகிறது. பிரிட்டிஷ்அரசாங்கம் இந்தியாவிலேற்பட்டதுமுதல் அரசாங்கத்தின் உளவாளியாயிருந்து 1000, 2000, 5000என்று சம்பளம் வாங்கித் தின்றுகொண்டிருந்த—இருக்கிறவர்கள்யார்? என்பது ஒரே குடும்பத்தில் ஒருவர் காங்கிரசின்போால் சுயராஜ்யம் வேண்டுமென்று கத்துவதும் ஒருவர் சி. ஐ. டி. உத்தியோகம் பார்த்து அரசாங்கத்துக்கு உளவாளியாக இருப்பதும், உத்தியோகத்துக்குத்தகுதியற்ற மற்றொருவன் மடிசஞ்சிவைத் தூக்கட்டிக்கொண்டு சனாதனதர்மம் பேசுவதும் படிப்பதற்கு லாயக்கில்லாதவன் கோவிற்பூசாரியாயிருந்து கல்லைக்கழுவி காசைப் பறிப்பதும், எதற்கும் உதவாத சோம்பேரி ஒருவன் குருக்களென்றும் புரோகிதனென்றும் சொல்லிப் பார்ப்பனரல்லாத சோணகிரிகளிடம் பணம்பறிப்பதும் சுதந்திரச்சங்கின் ஆசிரியரின் இனத்தைச்சேர்ந்தவர்களா? அல்லதுதோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களா? என்று கேட்கின்றோம். அரசாங்கச்செலவில் உலகம்முழுதும்சுற்றிகாந்தியை பைத்தியக்காரர் அறுகரீகமனிதர்என்றுதூற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தைப்போற்றிப்பிரசாரம் செய்து மகாகனம் பட்டம் பெற்ற ஸ்ரீனிவாச சாஸ்திரிக்கும், சென்னை அரசாங்கச் சட்ட மெம்பராயிருந்து சர்க்காருக்கு நல்லபிள்ளையாய் நடந்து காங்கிரஸ் கிளர்ச்சியை யொடுக்குவதற்கு உளவாளியாகவிருந்து மாதம்5000ரூபாய் சம்பளம் வாங்கியும் சமீபத்தில் இந்திய கவர்மெண்டின் சட்ட மெம்பர் ஸ்தானம் காலியானவுடன் அதில் போய் ஒட்டிக்கொண்ட சர். பட்டம் பெற்ற சி. பி. இராமசாமி அய்யருக்கும் ஆஸ்திரேலியா சென்று அரசாங்கத்தைப் புகழ்ந்து பாடிய திவான்பகதூர் பட்டம் பெற்ற ரெங்காச்சாரிக்கும், இன்றுசென்னை அட்வகேட் ஜெனரலா யிருந்து அரசாங்கத்தை நடத்திக் கொடுத்துகொண்டிருப்பதோடல்லாமல் இந்தியா கவர்ன்மெண்டில் எந்தப் பெரிய பதவிக்குவரலாமென்று முயற்சிபண்ணிக் கொண்டிருக்கும் தோழர் அல்லாடிகிருஷ்ணசாமிஅய்யருக்கும்பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தொண்டர்கள், அடிபட்டும், தெருவில் இழுக்கப் பட்டும், மண்டைகள் உடையப் பட்டும். உயிரைக் கொடுத்தும், சொத்தை பறிகொடுத்தும் சிறை சென்றபின்னும் நல்லாகாரமின்றிக் கஷ்டப்பட்டும் காங்கிரசில் வேலைசெய்ய மோட்டாரிஉட்கார்ந்தபடியே துண்டுப் பிரசுரம் வழங்கி அதன் காரணமாய்ச் சிறை சென்றும் வீட்டிலிருப்பதைவிட மேலான நிலையில் சுகமாய் ஏ. வகுப்புக் கைதியாக சிறைக்குள் நடத்தப்பட்டுஎவ்விதகஷ்டமுமடையாமல்வெளிவந்து1,2வகுப்புவண்டிகளில் பிரயாணம் செய்து கொண்டு கதர் இலாகா முழுவதிலும் உயர்ந்த சம்பளங்களிலெல்லாம் தன் இனத்தவர்களை நியமித்துக் கொண்டு பசுத்தோல் போர்த்த புலியாய்த் திரிந்துகொண்டு எந்தவழியில் பார்ப்பனரல்லாத மக்களைத் தலைதூக்கவொட்டாமற் செய்யலாமென்பதற்கு யுக்தி கண்டுபிடித்துக்கொண்டு வரப் போகும்போதும் சட்டசபை எலக்ஷனில் சட்டசபையை எவ்விதம் கைபற்றுவது என்பதை ஆலோசனை செய்து கொண்டிருக்கும் தோழர் குள்ள நரி இராஜகோபாலாச்சாரிக்கும் எந்த விதத்தில் நமது ஆர். கே. ஷண்முகம் அவர்கள் குறைவானவர் என்று சுதந்திரச்சங்கின் ஆசிரியரையும், சங்கைப் பிரியமாய்த் துட்டுக்கொடுத்து வாங்கிப் படிக்கும் பார்ப்பனரல்லாதமோழையையும்கேட்கிறோம். வியாசம் நீண்டு விட்டதால் தற்சமயம் இத்துடன் நிறுத்திக்கொண்டு ஒருவிஷயத்தை மட்டும் கூறி முடிக்கிறோம். சுதந்திரச் சங்கின் ஆசிரியரே, உம்முடைய கையில் பத்திரிகை யிருப்பதாய் நினைத்து யாரையும் எவ்விதமும் எழுதலாமென்று துணிகின்றீர் போலும். நீர்எழுதிய பாஷைகளின் படியும் அதற்கும் கேவலமாகவும் உங்களினத்தவர்களின் ஊழல்களைப் பற்றியும் உமக்கு யார் பணம் கொடுத்து இந்தப்படி எழுதச் சொல்லுகின்றான் என்கின்ற சசிமால வண்டவாளங்களைப் பற்றியும் எழுத முடியுமென்பதை இனி மேலாவது உணர்ந்து கொள்ளும். பத்திரிகையை நிரப்புவதற்கு ஏதேனும் விஷயம் வேண்டியிருப்பின் வெள்ளைக்காரன் காலில் போய் முட்டிக்கொள்ளும். அல்லது காந்தி ஒன்னுக்குப் போனார் அது பன்னீர வாசம் வீசிற்று என்பது போன்றதை எழுதி நிரப்பிக் கொள்ளும் விடுத்துப் பார்ப்பனரல்லாதார் காலில் இனி மேலாவது முட்டிக் கொள்வதை விட்டு விடுவீராக.

அனுப்புபாளையத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமியின் சொற்பொழிவு.

"தொழிலாளர் நிலைமை"

சென்ற 5-3-33ந் தேதி அனுப்புபாளையம் பாத்திரத்தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் தோழர் முருகநாதம் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. சுமார் 1000 பேர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் வருமாறு:—

தோழர் தொண்டர் படை தலைவர் க. தி. வெங்கட்டரமணன், கேப்டன்களான ஊ. ந. மு. அப்புசாமி, க. வீ. கி. வீரப்பன், ஈ. அருணப்பன், தெ. சீ. சங்கரப்ப செட்டி, தோழர்கள் கூ. வெ. சீனிவாசன், கா, கு. சித்தலிங்கம், க. வி. ந. கு. ராமசாமி, வெ. வரதராஜன், வே. வெங்கடாசலம், க முருகப்பசெட்டி கோ. ஆறுமுகம், ரா. ப. கிருஷ்ண சாமி, அ. பா ராயப்பன், க. ந. வெ. அருணாசலம், மா. க. நடராஜன், சி. கருதாசலம்; கோ. க. கிருஷ்ண சாமி, இ. சந்தரப்பன். ச பு. பழனியப்ப செட்டியார், ச. பு. வேலப்ப செட்டியார், மா. கு. க. முருகநாத செட்டியார், சி. கா. ராமசாமி செட்டியார், வ. ப. ராயப்ப செட்டியார், மா. பழனியப்ப செட்டியார், வ. ப. ராமசாமி செட்டியார், தா. மு. சின்னுசாமி செட்டியார், ஊ. ந. கருப்பண செட்டியார், கோ. கந்தசாமி செட்டியார், தி. ந. அருணாசலம் செட்டியார், உ. கொ. முருகப்ப செட்டியார், அ. திருவேங்கிட செட்டியார், குழந்தைவேலு செட்டியார், கா. ந. அருணாசலம் செட்டியார், கோ. ந. ராமசாமி செட்டியார், அ. ப. கிருஷ்ணசாமி செட்டியார், வ. ப. ரா. சின்னசாமி செட்டியார், கோ. அனைசியப்பசெட்டியார் க. வி. வ. பழனியப்ப செட்டியார், சி. அடைக்கலம் செட்டியார், தா. ஈ. சாக்கிசெட்டியார், ப. வ. சாமுவேல் செட்டியார், பெ. சி. அ. பொன்சுவனை செட்டியார், மா. அ. கா, இராமச்சந்திரம் செட்டியார், மொ. சி. ந. கிருஷ்ணசாமி செட்டியார், ஆ. குருசாமி செட்டியார், ஓ. ரா. வீரப்பசெட்டியார், அண்ணாமலை செட்டியார், சி. மு. குமாரசாமி செட்டியார், பொ. சு. அங்கப்ப செட்டியார், ச. கிருஷ்ணசாமி செட்டியார். ப. பொ. கிருஷ்ணசாமி செட்டியார், ப. பொ, சுந்தரம் செட்டியார், தி. பங்காருசாமி செட்டியார், கா. கொ. ராமசாமி செட்டியார், ப. மாரப்பகவுண்டன், அம்மாசைக்கவுண்டன், சி. க. மாரியப்பன், அ. கன்னியப்பன் ஆகிய இன்னும் பலருமாவார்கள்.

தோழர் பொன்னம்பலம் அவர்கள் "வாலிபர்கள் கடமை" என்பது பற்றிப் பேசினார். பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "தொழிலாளர் நிலைமை" என்பதுபற்றிப் பேசினார். அது வருமாறு:—

தோழர்களே!

இது பரியந்தம் தோழர் பொன்னம்பலனார் "வாலிபர்கடமை என்ன?" என்பதுபற்றி விபரமாக உங்களுக்கு எடுத்துச் சொன்னார். அவர் சங்கராச்சாரியாரின் விஷயத்தைப் பற்றிப் பேசும்போதும் மத சம்பந்தமான அக்கிரமங்களைக்கூறும் போதும் கடுமையாகப் பேசியதாக நீங்கள் கருதலாம். சகிக்க முடியாத அக்கிரமங்கள் மதத்தின் பேரால் நடைபெறும் பொழுது அதை மேல் பூச்சாகப் பேசிப்போவதற்கு சாத்தியப்படாததாகவே இருக்கிறது. சென்னையில் கொள்ளையடித்தது போன்று மக்களிடம் மூடத்தனத்தைப் புகட்டி கொள்ளையடிப்பதை நேரில் சென்னையில் போய்ப் பார்த்திருந்தீர்களானால் தெரியும். இவ்விஷயத்தில் அவர் வாலிபரும் உணர்ச்சியுள்ளவருமாதலால் மிக்க ஆவேசத்துடனே தான் பேசினார். இன்னும் கவனித்தால் இன்றையதினம் கேவலமாகமக்களை மதிக்கப்படுகிற தீண்டாமை விலக்குக் கிளர்ச்சிக்கும் காங்கிரசில் பிரபல தேச பக்தர்கள் என்பவர்களும், என் தோழர் காந்தியாரும் கூட உண்மையில் மத சாஸ்திர சம்மந்தமான அபிப்பிராயங்களைக் காட்டுவதன் மூலம் தீண்டாமை விலக்குக்குத் தடைசெய்து வருகிறார்கள். சஙகராச்சாரி பிரசங்கமும், மதசம்பந்தமானதுதான். மத சம்பிரதாயப்படிக்கு இருவரும் நம்மை தேவடியாள் மக்கள், (சூத்திரர்கள்) சண்டாளர்கள் என்று தான் சொல்லுகிறார்கள். மதத்தைப் பொறுத்வரையில் ஒன்றுமையாவதற்கு வேறு வழியுண்டா என்பது யோசித்தால் எதுவும் கிடையாது. நமக்குள் வெகுகாலமாக ஒற்றுமை இல்லை என்று தான் சொல்லிக்கொண்டு வந்தோம். ஆனால் காந்தி காங்கிரஸ் வந்தபின்பு சுயராஜ்யம் ஏற்பட்டால் ஒற்றுமை ஏற்பட்டுவிடும் என்று சொல்லிக்கொண்டு இருந்து இன்றைக்குயார் கோவிலுக்குள் போகலாம் என்ற கேள்வி வைதீகர்களைக் கேட்டுக்கொண்டிருந்தால் அவர் இன்று அரசியல் சங்கராச்சாரி என்பதற்கு என்ன தடை. சங்கராச்சாரிக்கும் காந்தியாருக்கும் மத விஷயத்திலும், ஜாதி வர்ணம் என்பதிலும் நெருங்கிய சம்பந்தம் உண்டு தான். இன்று கோவிலுக்கு போகவேண்டுமென்றோ, போகவேண்டாமென்றோ போகாதேயுங்கள் என்றோ சொல்வதில் நமது விஷயமும் வாராமலில்லை. கோவிலுக்குப் போவது விஷபமாக தடை செய்யப்பட்ட மக்களுக்கு இன்றும் தடை ஏற்படுத்தி அதற்கு ஆதாரம் சொல்லி உயர் ஜாதி என்பது இருக்க வேண்டும் என்று சொல்லி ஆதாரம் காட்டவே இம்மடாதிபதிகளும் சங்கராச்சாரிகளும் கிளம்பி வருண தர்மத்தைப் பலப்படுத்துகிறார்கள். இவர்கள் விஷயத்தை ஒப்புக்கொண்டு விடுவதால் நமது நிலைமைமாறப்போவதுமில்லை. பழைய நிலைமை கெட்டிப்படும். மாற வேண்டுமானால் அடியோடு இம்மத சம்பந்தமான வழக்கம் மாற்றப்பட ஒரு புரட்சி ஏற்பட வேண்டும். தோழர் பொன்னம்பலனார் சொல்வதைப்போன்று இவ்விஷயமும் மத சம்பந்தமான அக்கிரமங்களையும் தடுக்க வேண்டுமானால் தைரியமாகக் எடுத்துச் சொல்ல வேண்டியது தான். ஏனெனில் சமூகத்திற்கு விளக்கிக்காட்டக்கூடிய அளவுக்கு வரும் பொழுது தைரியமாகக் கண்டித்துப் பேசுவதினாலேநான் மக்கள் மனதில் படுகிறது. அதிலும் சங்கராச்சாரி கொள்ளையைப் போன்ற அக்கிரமங்களைத் தடுக்க வேண்டுமானால் கண்டிப்பாக எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாது சொல்லித்திரவேண்டியதாகவே இருக்கிறது.

சங்கராச்சாரி போன்றவர்களும், லோககுருக்களும் சொல்லித்திரிகின்ற மதத்தை ஒப்புக்கொண்டால் இன்று உங்களைப் போன்ற தொழிலாளிகளும் கூட தொடப்படாத மக்களாகவே ஆகிவிடுகின்றீர்கள். இதற்கு ஆதாரம் நமது புராணமும் காந்தியார் வர்ணாசிரம தருமமும் ஜாதிமுறையுமே போதுமானது.

ஏனெனில் இந்து மதத்திலுள்ள எந்த சாஸ்திரங்களும், சரீரத்தால் பாடுபட்டுழைக்கும் மக்களைத் தீண்டக் கூடாத ஜாதி என்றே சொல்லுகிறது. அதற்கு நாம் இதுவரை கொடுத்து வந்த மரியாதையிலேயே இக்காலமுள்ள இத்தனை ஜாதிகளும் இருக்கிறது. மததாசர்கள் சங்கராச்சாரிகள் சொல்வதற்கும் சேர்த்து மரியாதை செய்தால் அடுத்த நாளே இன்னும் பல கோடி மக்கள் தீண்டாதார் ஆகிவிடுவார்கள் என்பதற்குச் சந்தேகமே இல்லை. வேண்டுமானால் வருணாசிரம தருமம் தவறாமல் நடைபெற்று வரும் மலையாளத்தில் இன்றைக்கும் உழைத்துக்கொட்டும் மக்கள் குளத்திலுள்ள தண்ணீரையும் தொடக் கூடாது, தொட்டால் தீட்டு என்று சொல்வதுமட்டுமல்ல. அடி உதை, அப்புறம் சட்டப்படி கைதியாகி சிறை செல்லவேண்டியதுதான். அதே வருணாச்சிரம முறைப்படி இன்று தோழர் காந்தியாரும் கூட மலையாளத்தில் கோவிலுக்குள் போக முடியாது. லஜபதிராயும் ஜவகர்லாலையும் கூட மலையாளத்தில் ஆலயத்தில் அனுமதிக்கப்படவில்லை என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. லஜபதியும், காந்தியும் அனுமதிக்காத கோவில் இன்று எத்தனை ஆபாசப் பார்ப்பனர்கள் நுழைந்து அக்கிரமங்கள்செய்கிறார்கள் என்பவைகளை தான் தோழர் பொன்னம்பலனாரவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் கவனித்தால் சங்கராச்சாரி காந்தி மாளவியாக்கள்சொல்லிய எந்தப்புராணத்தையும் ஒப்புக்கொள்வதின் மூலம் என்ன ஏற்படுகிறது என்பது விளங்கவில்லையா? இதை தடுத்து அடியோடு நிறுத்தப்பட வேண்டுமானால் பலமான பிரசாரம் மட்டும் போதாது புரட்சியும் சட்டமும் அவசியமாகவே இருக்கிறது. எத்தனை தான் பணத்தைக் கொட்டிக் கொடுத்து காலில் விழுந்து கும்பிட்டு பெண்சாதி பிள்ளையுடன் அழுக்கு நீரைக் குடித்தாலும் பின்னும் நம்மைச் சூத்திரன், வேசிமகன், அடிமை, சண்டாளன் என்று தான் சொல்லுகிறான் என்பதை இக் கூட்டத்தில் யாரேனும் மறுக்க முடியுமா என்று தான் கேட்கிறேன்.

(தொடரும்)

தஞ்சை ஜில்லா 3-வது சுயமரியாதை மகாநாடு, நாகபட்டினம்.

ஷை மகாநாடு 8, 9-3-33 ந்தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நாகை கோர்ட்டுக்கெதிரில் அமைத்திருக்கும் "சமதர்ம" ப்பந்தலில் நடைபெறும். மகாநாட்டிற்கு புதுக்கோட்டைத் தோழர். கே. முத்துசாமிவல்லத்தரசு பி. ஏ. பி. எல். எம். எல் சி. அவர்கள் தலைமை வகிப்பார்கள். தோழர் நிலாவதி ராமசுப்பிரமணியம் அவர்கள்மகாநாட்டைஆரம்பித்துவைப்பார்.

மகாநாட்டிற்குப் பலவிடங்களிலுள்ள சுயமரியாதைத்தோழர்கள் விஜயம் செய்வார்கள். மகாநாட்டிற்கு தீர்மானங்கள் அனுப்புவோர் ஏப்ரல் மாதம்முதல்தேதிக்குள் மகாநாட்டுக் காரியதரிசிக்கு அனுப்பிவிடவேண்டும். பெண்களுக்கு எவ்வித கட்டணமுமில்லை. வரவேற்புக் கட்டணம் ரூ3—0—0 பிரதிநிதி கட்டணம் ரூ.1—0—0 விசிட்டர் கட்டணம் ரூ0—1—0

ஏ. கோவிந்தன், என். சிவஞானம்
விளம்பர அதிகாரிகள்.

அருணாசலக்கவிராயர் மரணம்.

தோழர் அ. இராகவன் அவர்களது தந்தையார் தோழர் அருணாசலக்கவிராயர் அவர்கள் 13-3-33-உ சாத்தான்குளத்தில் காலஞ்சென்றுவிட்டார்.

(ஒரு நிருபர்)

தேவை.

தமிழ் சுருக்கெழுத்து எடுப்பவர் (Tamil Short Hand) ஒருவர் தேவை. பிரியமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துகொள்ளவும்.

மானேஜர்,
குடி அரசு ஈரோடு.

குடி அரசு.

ஈரோடு 1933 மார்ச்சு-மீ 26-உ

அரசியல் சீர்திருத்தம்.

—:0:—

அரசியல் சீர்திருத்தத்தின் குறிப்புகள் "வெள்ளைக் காகித" அறிக்கை என்னும் பேரால் வெளிவந்து இருக்கிறது. அதைப்பற்றிய வாதப்பிரதிவாதங்கள் இந்தியப்பத்திரிகைகளின் பக்கங்கள் பூராவையுமே கவர்ந்து கொண்டு தினமும் சேதிகள், பிரசங்கங்கள், அபிப்பிராயங்கள், தீர்மானங்கள் என்கின்ற ரூபங்களாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

என்றாலும் இதைப்பார்த்த நமக்குப்பதினேழ்த்துக்குள்ள ஒருமாரி கையில் நெருப்புப் பிடித்துக் கொளுத்து விட்டெறியும்போது அந்த வீட்டைக்கட்ட வேலை செய்தவனும், குடியிருக்க வீடில்லாமல் சமீபத்தில் ஒரு மரத்து நிழலில் பொங்கிச்சாப்பிட்டு விட்டு வேலையில்லாமல் தனக்குக் கையை வைத்துத்தரையில் நாளைச் சாப்பாட்டிற்கு வழி என்ன என்று ஏங்கிப் படுத்துக்கிடக்கும் ஒருவனுக்கு எவ்வளவு கவலையிருக்குமோ அவ்வளவுதான் இன்றைய சீர்திருத்த முயற்சியிலோ, வெள்ளைக்காகித அறிக்கையிலோ நமக்குக் கவலையுண்டு.

ஏனெனில் அந்த வீட்டை நெருப்புபற்றி எரிவதிலிருந்து காப்பாற்றப்படுவதில் இந்த மரத்தடியில் பொங்கித் தின்று கிடப்பவனுக்கு யாதொரு பயனுமில்லை.

மற்றும் அந்த வீடு அடியோடு வெந்து சாம்பலாகுமானால் அதை மறுபடியும் புதுப்பித்துக் கட்டுவதன் மூலம் இந்த வீடு வாசலற்ற—வேலையற்ற ஏழைத் தொழிலாளிக்கு ஏதாவது வேலை கிடைத்துச் சற்று கஞ்சிக்காவது வழியுண்டாகும்.

அந்தப்படி பார்க்கும்முறையில் நாம் இந்த வெள்ளைக்காகித அறிக்கையில் இந்திய மக்களுக்கு லாபம் என்ன? நஷ்டம் என்ன என்று பார்த்தால் நஷ்டம் இருந்தவரையில் தான்நமக்கு-ஏழை மக்களுக்கு-தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தொழிலாள உழைப்பாளி மக்களுக்கு நன்மை என்றுதான் சொல்லவேண்டும். எப்படியென்று பாருங்கள்.

இந்திய ஏழை மக்களின் பேரால் சுயராஜ்யம் கேட்கப்புறப்பட்டு இன்றைக்குச் சுமார் 40 வருஷ காலம் இருக்கும். இதுவரையில் 2, 3 தொகுதியாய் சுயராஜ்யம்—அரசியல் சீர்திருத்தம் வழங்கப்பட்டாய்விட்டது. அதைப்பெற்று அமுலில் நடத்தியும் ஆய் விட்டது.

இதனால் இந்திய ஏழை மக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது? சோம்பேறிகளாகிய பார்ப்பனர்களுக்கு—பிச்சை யெடுத்துப் பிழைக்கவேண்டியவர்கள் என்னும் பார்ப்பனர்களுக்கு உத்தியோகங்கள் எவ்வளவு? அதுவும் எப்படிப் பட்ட உத்தியோகங்கள் என்று பார்த்தால்,

கவர்னர் நிர்வாக சபை அங்கத்தினர், ஜட்ஜுகள், கலெக்டர்கள், திவான்கள் முதலிய 10000, 5000, 4000, 3000, 2000, 1000 ரூ. வீதம் மாதம் கிடைக்கத்தக்க இப்படிப்பட்ட உத்தியோகங்கள் கிடைத்தது. மற்றும் அவ்வகுப்பு 100க்கு 100 பேர்கள் என்றும் மண்வெட்டியை கையில் தொடாமலும், மூட்டைதூக்காமலும் வாழ்வதற்கு சௌகரியம் ஏற்பட்டது. பலர் சர் ஆனார்கள். சிலர் மகாகனம் ஆனார்கள்.

மற்றபடி முதலாளி மார்களுக்கும், பணக்காரர்களுக்கும் 100க்கு 100 வீதம் லாபம் கிடைத்து பெரிய பெரிய முதலாளி—மில் சொந்தக்காரர்கள்—கோடீஸ்வரர்கள் ஆனார்கள்.

மிராசுதார்களும், லேவாதேவிக்காரர்களும், ஜமீன்களாகி, ராஜாக்களாகி, கோடீஸ்வரர்களாகி பரம்பரை ராஜாக்கள் ராஜ வம்சஸ்த்தார்கள் ஆனார்கள்

மற்றும் பலர் மந்திரிகளானார்கள், மகாத்மாக்களானார்கள்.

ஏழைகள் என்ன ஆனார்கள்?—ஏழைத்தொழிலாளிகள் என்ன ஆனார்கள்? என்றென்றும் ஏழைகளே ஆனார்கள் என்பதல்லாமல் வேறென்ன?

இதுபோலவே இனியும் வரப்போகும் சுயராஜ்ஜியத்தில்—சீர்திருத்தத்தில் இந்த நிலையைத் தவிர வேறு எந்த நிலையை எதிர் பார்க்க முடியும்? ஆதலால் இது "நல்லசீர்திருத்தமாய்" இருந்தால் என்ன "நாசமாய்ப்போன சீர்திருத்தமாய்" இருந்தால் என்ன என்றுதான் கேட்கின்றோம்.

"ஆத்து நிறைய தண்ணீர் போனாலும் நாய்க்கு சளப்புத் தண்ணீர் (நக்கி சாப்பிடும்) தண்ணீர்தான்" என்ற பழமொழியும் "நாட்டுக்கு நல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலைதான்." என்ற பழமொழியும் இந்த இந்திய சுயராஜ்ய சீர்திருத்தத்திற்கே மிகவும் பொருத்தமாயிருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும்.

வரப்போகும் சுயராஜ்யத்தின் யோக்கியதையைப் பார்க்கவேண்டுமானால் அதற்காகச் செய்யப்பட்ட கிளர்ச்சியின் யோக்கியதையைப்பார்த்தாலே அறிவுள்ளவனுக்குத் தானாக விளங்கிவிடும்.

அதாவது இந்த 10 வருஷ கிளர்ச்சியின் தலைவரான தோழர் காந்தியவர்கள் செய்த கிளர்ச்சியின் தத்துவங்கள் என்ன என்று பார்ப்போமானால்,

1. "பிராமணர்களுக்கு" (பார்ப்பனர்களுக்கு அவன் எவ்வளவு அயோக்கியனாக இருந்தாலும் பிறவி மாத்திரத்தாலேயே உயர்ந்த ஜாதியான் அதாவது சரீரத்தினால் வேலை செய்யப்படவே கூடாதவன் என்கின்ற தத்துவம்கொண்ட) வருணாச்சிரம தருமமும்,

2. "க்ஷத்திரியர்களுக்கு" (காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் பயனையும், ரவுண்டேபிள் கான்பரன்சுக்கு சென்று வந்ததின் பயனையும்,

சுதேச சமஸ்தான ராஜாக்கள் ஜமீன்தாரர் ஆகியவர்களுக்கு) பாதுகாபும்,

3. "வைசியர்களுக்கு" ("மில் முதலாளிகளுக்கு 100-க்கு 100 வீதம் லாபம்சம்பாதிக்கத் தகுந்த மாதிரி) அன்னியதுணி பகிஷ்காரமும்,

4. "சூத்திரர்களுக்கு" (ஏழைகளுக்கு நாள் 1-க்கு 10-மணி நேரம் வேலை செய்தால் ஒரு அணாகூலி அதுவும் அந்த துணியை வாங்குகிறவர்கள் ஒரு ரூபாய், துணிக்கு இரண்டுரூபாய் விலை போட்டு வாங்கினால் மாத்திரம் அந்தஒரு அணாகூலியும்கிடைக்கக்க) கை ராட்டினமும், (அவன் எவ்வளவு மேலான அறிவும், ஞானமும், இருந்தாலும் அவனவன் ஜாதி முறைப் படியான வேலையே செய்யவேண்டும் என்னும்படியான) சுதர்ம ஜாதிமுறையும்,

5. "பஞ்சமர்களுக்கு" (தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு என்றும் அவர்களது தாழ்ந்த தன்மை நிலைத்திருக்கவும் அவர்களுக்கு மூடநம்பிக்கை பலப்பட்டு முன்னேறாமல் அவதிப்படவும் ஆஸ்பதமான)

ஹரிஜன பட்டமும், கோவில் பிரவேசமும்.

6. "அறிஞர்களுக்கு" (இனி படித்த பல ஜாதி கூட்டத்தாருக்கு காங்கிரசின் பேரால்) சட்டசபை பிரவேசமும்.

தான் இதுவரை அரசியல் கிளர்ச்சியால் பல உள்பிரிவு, தலைப்பு பெயர்களாய் இருந்து கிளர்ச்சிநடந்துவந்திருக்கின்றது. இந்தக் கிளர்ச்சிக்கு எது கிடைக்கவேண்டுமோ அது கிடைத்துவிட்டது ஒரு சமயம் மேல்கண்ட தலைப்புகளுக்கு பூராவும் நன்மையும், பாதுகாப்பும் இல்லாமலிருந்தால் அதற்காக வேண்டுமானால் இனியும் "போராது போராது" என்று சிறிது கூப்பாடு, வெளிவேஷக்கூப்பாடு அதுவும் அதாவது வேறு ஒருவர் வீட்டுக்கு இழவுக்குப்போன பெண்கள் ஒப்பாரி வைத்தும், மாரடித்து அழும் சடங்கு நடக்கும்போது மாரடித்துக்கொண்டும், அழுவதுபோன்ற வேஷ அழுகையே அழுவதாயிருந்தால் இருக்கலாம்.

ஆகவே காந்தியார் இஷ்டப்படியும், காங்கிரஸ் கோரிக்கைப் படியும் சுயராஜ்ஜியம் கிடைத்து விட்டது. இதில் இனி சில வார்த்தை திருத்தங்கள் மாத்திரம் பாக்கி இருந்தால் இருக்கலாம். ஆனால் ஏழைகளுக்கு வேண்டிய சுயராஜ்ஜியம்-தொழிலாளிகளுக்கு வேண்டிய சுயராஜ்ஜியம் என்றதின் வாசனையோ நிழலோ, சிறிது கூட இல்லை என்றும் அதற்கான நாம் செய்ய வேண்டிய வேலையும், கிளர்ச்சியும் வேறு என்றும், அதன் முதல்படி இந்தகாங்கிரஸ் சூழ்ச்சிகளையும் அதற்காக மேற்கண்ட தலைப்பு கிளர்ச்சி திட்டங்களையும் அடியோடி ஒழிக்க வேண்டியது தான என்பதோடு நமக்கு இந்த சுயராஜ்யம் வேண்டவேவேண்டாம் என்றும் தொழிலாளி ராஜ்யமே வேண்டும் என்றும் சொல்லுவோம்.

குடியரசு “குபேர” பட்டணத்தின் சிறப்பா? சிரிப்பா?

——:0:——

அமெரிக்கா தேசத்தை இந்திய மக்கள் குபேர பட்டணமென்று சொல்வதுண்டு. குபேரபட்டணமென்றால்செல்வம் தாண்டவமாடும் பட்டணமென்று பெயர். உண்மையிலேயே அங்கு மற்ற நாடுகளைவிட செல்வம் அதிகந்தான்.

உலகல் பல பாகங்களிலுள்ள செல்வங்களும் பல வழிகளில் அமெரிக்காவுக்குப் போய்ச் சேருகின்றன. அமெரிக்கா செல்வம் மற்ற நாடுகளுக்கு வியாபார மூலமாகவும், லேவாதேவி மூலமாகவும் முதலாக அனுப்பப்பட்டு வட்டியும் லாபமும் ஏராளமாய் அடைகின்றது.

மகாயுத்தத்திற்காக மற்ற தேசங்கள் பட்ட கடன்களில் பெரும் பகுதி இன்னமும் கட்டுவளியாகாமல் எல்லா தேசமும் அமெரிக்காவுக்குக் கடனாளியாகவேயிருக்கின்றது.

இதுமாத்திரமா, அமெரிக்கா என்றால் அது ஒரு பெரிய பழமையான “குடி யரசு நாடு.” சக்கிரவர்த்தியில்லாமல், அரசன் இல்லாமல் “பிரஜைகளால் பிரஜைகளுக்காக” ஆளப்படும் “ஜன நாயக” ஆட்சியுள்ள நாடு என்றும் சொல்லப்படுவதாகும்.

அதன் (குடி யரசு--ஜனநாயக) தலைவர் தேர்தலுக்கு பத்து லட்சக்கணக்கான நபர்கள் ஏழைகள், தொழிலாளிகள் ஆகிய மக்கள் ஓட்டுச் செய்துதான் தலைவர் (தேர்தல் நடந்து) நியமிக்கப்படுவது “கண்டிப்பான” சட்ட முறையாகும்.

இப்படியெல்லாம் இருந்தும் என்ன பயன்? இன்று அந்நாட்டில் ஒன்றரை ($1\frac{1}{2}$) கோடி மக்களுக்கு—அமெரிக்கக் குடி மக்களுக்கு—ஓட்டுச்செய்ய உரிமை உள்ள மக்களுக்கு --கஞ்சியுமில்லாமல் வேலையுமில்லாமல் தெருவில் திண்டாடித்திரிகிறார்கள் என்றால், இது அக்குபேரபட்டணத்துக்கு சிறப்பா? அல்லது சிரிப்புக்கிடமானதா? என்பதையோசித்துப்பாருங்கள்.

அமெரிக்கத் தொழிலாள மக்களின்உதவியால்தான்--அவர்களது ரத்தவேர்வை வெளிப்படும்படியான உழைப்பினால் தான் அமெரிக்காநாடு “குபேர பட்டணம்” என்கின்ற பெயரைஅடைந்ததும், அதுமற்ற தேசத்திய செல்வங்களை இழுத்துக் கொண்டதுமாகும்.

இன்று உலகத்திலுள்ள பெரிய பெரிய தொழிற்சாலைகள் என்பனவைகள்பலது அமெரிக்காவில்தானிருக்கின்றன.

உலக மார்க்கட்டுகளுக்குப் பல தேசங்கள் அனுப்பப்படும் சமான்களின் கணக்குகளில் அமெரிக்கா தேசம் அனுப்பப்படும் சாமான்கள்தான் அதிகமான அளவுடையது. இருந்தும் என்ன பிரயோஜனம், இன்று உலகில் எங்குமில்லாத அளவு அங்கு (15000000) ஒன்றரைக்கோடிமக்களுக்குதொழிலில்லையென்றால் இந்தகுபேர பட்டணம் குடி அரசு தேசம் என்பதின் அருத்தம் என்னஎன்று கேட்கின்றோம். ஒன்றரைக்கோடி மக்களுக்கு வேலை இல்லை என்றால் இந்த ஒன்றரைக் கோடி மக்களின் பெண்டு பிள்ளைகள், குழந்தை குட்டிகளையுஞ்சேர்த்துக் கணக்குப் போட்டுப் பார்த்தால் எத்தனை கோடி மக்கள் பட்டினியாய்க் கிடக்கின்றார்கள் என்று பாருங்கள்.

இது மாத்திரமா? அமெரிக்கா தேசமானது 10 அடுக்கு, 20 அடுக்கு, 50 அடுக்கு, 100 அடுக்கு மாடிகள் கொண்ட கட்டிடங்கள் வானமளாவ இருக்கின்றன வென்றும், சிங்கார நந்தவனங்கள், ஜலக்கிரீடை நிலயாவிகள், கால் பந்து, கைப்பந்து, விளையாட்டுகள் விளையாடும் மைதானங்கள் முதலியவைகள் எல்லாம்கூட மேற்படி வானமளாவிய மண்டபங்களில் இருக்கின்றனவென்றும் சொல்லப்பட்டதும் “இந்திரலோக”மென்றும், “பொன்னுலக”மென்றும் மாறுபெயர் கொடுத்தழைக்கப் படுவதுமான அமெரிக்காவிலுள்ள மக்களில் லட்சக் கணக்கானபேர்களாகிய மேற்படி வானமளாவிய மண்டபங்களையும் கூட கோபுரங்களையும் கட்டிய மக்கள் இன்றுஅங்கு குடியிருக்க, குடியிருக்கக்கூட அல்ல, பகலெல்லாம் தெருத்தெருவாய் திரிந்து விட்டு இரவில் போய் சிறிது நேரம் படுத்தோ உட்கார்ந்தோ கண் அயர்ந்துதூங்கக்கூட இடமில்லாமல் முனிசிபாலிடியார் தெருக்களில் ரிப்பேர் செய்வதற்காகபோட்டிருக்கும் குழாய்களுக்குள்போய்ப் படுத்துக்கொள்வதும்பெரிய ஜலதாரைகளுக்குள்இறங்கிப்படுத்துக் கொள்வதுமாயிருக்கிறார்கள் என்றால், வானமளாவியகட்டடம்இருப்பதின்இரகசியம்என்னஎன்றுபாருங்கள்.

இந்தஅமெரிக்கா தேசமானது ஒருகாலத்தில் அன்னிய அரசாட்சிக்கத்திலிருந்து விடுதலை பெற்று சுயராஜ்யம் பெறவும், முடி அரசிலிருந்து விடுதலை பெற்று குடி அரசு பெறவும் எத்தனை லட்சக் கணக்கானமக்களைப்பலிகொடுத்தது தெரியுமா? பீரங்கிக் குண்டுகளுக்கு இரையாக்கி பாலா கத்திகட்டிகளுக்கு இலக்காக்கி கை பொடிந்து, கால் முறிந்து, கண் போய், மூக்குப் போய் காது போய், உயிர் விட்டு இருக்கவேண்டும் என்பதையும், அப்படி உயிர் விட்டவர்கள் எல்லாம் யாராயிருப்பார்கள் என்பதையும் கவனித்துப் பாருங்கள்.

அதுமாத்திரமல்லாமல் இன்று வானமளாவியமண்டபத்தில்“இந்திரன்”கள் போல்“குபேரன்”கள் போல இருக்கின்றவர்கள் யார்? கஞ்சிக்கு வகையில்லாமல் பெண்டு பிள்ளைகளுடன் தெருவில் திரிந்து ஒண்டவும், ஒதுங்கவும் இடமில்லாமல் தியங்கிப் பரிதவிப்பவர்கள் யார்? என்பதையும் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இப்படியே இன்று அதாவது அமெரிக்காபோல் அவ்வளவுஇல்லையானாலும்(4500000) நாற்பத்தி ஐம்பது லட்சம் பெயர்கள் இங்கிலாந்தில் ஏழை மக்கள் தொழில் இல்லாமல் வாடிவதைகின்றார்கள். சுயாட்சி குடி அரசு ஆட்சி பெற்ற நாடுகளாகிய ஜர்மனியிலும் அப்படியே, ஸ்பெயினிலும் அப்படியே, கிரீசிலும் அப்படியே (ரஷியா தவிர) மற்ற நாடுகளிலும் அப்படியே தான். வேண்டுமானால் எண்ணிக்கையில் சிறிது வித்தியாசமிருக்கலாம். ஆகவே சுயாட்சி, குடி ஆட்சி சுயராஜ்ஜியம் குடி அரசு ஆட்சி என்பவைகளின் புரட்டுகளை இதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள்.

இன்றைய அரசர்களும், குடி ஆட்சி தலைவர்களும் முதலாளிகளின் பிரதிநிதிகள் என்று மாத்திரம் சொன்னால் போராது முதலாளிகளேயாவார்கள்.

அவர்களுக்கு எதிர்ப்புக்காரர்களாய் எதிர் கட்சியில் இருப்பவர்களாய் இருந்துகொண்டு ஜனங்களின்--ஏழைகளின்-தரித்திர நாராயணர்களின் பெயர்களை சொல்லிக்கொண்டு சுயராஜ்ஜியத்திற்கும் குடிஅரசுக்கும் கிளர்ச்சி செய்யும் “வீரர்கள் ஏழைபங்காளர்”களாக இருப்பவர்கள் இந்த முதலாளிகளும், ஜமீன்தார்களும், மற்றும் இருவர்களுடைய பிரதிநிதிகளுமேயாவார்கள். இதில் யாருக்கும் எவ்விதத்திலும், சந்தேகம் வேண்டியதில்லை என்று மறுபடியும் கூறுவோம். சந்தேகமிருந்தால் மேல்கண்ட அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், ஜர்மன் ஆகிய தேசத்தை இன்று பாருங்கள். அப்பொழுது உங்களுக்கு உண்மை விளங்கிவிடும். அப்பொழுதும் உங்களுக்கு உண்மை விளங்கவில்லையானால் நீங்கள் இந்த “இம்பர்” நாட்டில் (இந்த உலகத்தில்) இருப்பதைவிட “உம்பர்” நாட்டில் (இங்கு இல்லாமல்) இருப்பதே மேலான காரியமாகும்.

காரைக்குடியில், போலீஸ் அட்டூழியம்.

காரைக்குடியில் இம்மாதம் 3-ந் தேதி வெள்ளிக்கிழமை மாலையில் கல்லுக்கட்டு என்கின்ற ஒரு ஒதுக்கு இடத்தின் வேலிக்கு உட்புறமாக தோழர் ஜீவானந்தம் அவர்கள் தீண்டாமை என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சில பார்ப்பனர்களின் ஏவுதலின் பேரில் ஒரு போலீசு சப் இன்ஸ்பெக்டர்கூட்டத்தில்புகுந்து திடீரென்று தோன்றி தோழர் ஜீவானந்தத்தை யாதொரு முகாந்திரமும் இல்லாமல் கன்னத்தில் அடித்ததாகவும் காரணம் சொல்லி அடித்தால் நலம் என்று தோழர் ஜீவானந்தம் மரியாதையாய்ச் சொல்லியும் மறுபடியும் பலமாக பல தடவை அடித்ததாகவும் உடனே கூட்டம் கலைந்து விட்டதாகவும், அந்த சப் இன்ஸ்பெக்டர் ஜீவானந்தத்தை அடித்தது மாத்திரம் போதாமல் தோழர் கணபதி என்பவரையும் தெருவில் வழிமறித்து அடித்ததாகவும், பிறகு மறுபடியும் கொஞ்ச தூரத்தில் சென்று கொண்டிருந்த தோழர் ராமசுப்பையா அவர்களையும் ஓடி வழிமறித்து பல அடிகள் கன்னத்தில் அடித்ததாகவும், ஏனய்யா? என்ன காரணமய்யா? சொல்லி விட்டு அடியுங்களையா என்று கேட்டும் சிறிதும் லட்சியமில்லாமலும் ஈவு இரக்கமில்லாமலும் கண்டபடி அடித்ததாகவும் பிறகு தோழர் ராம சுப்பையா அவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்று தெரிந்தவுடன் அந்த சப் இன்ஸ்பெக்டர் தனக்கு மேலால் ஏதாவது கேள்வி வரக்கூடுமோ என்று பயந்து மூவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் நியூசென்சுக்கு சார்ஜ் செய்து கைபெழுத்து வாங்கிக் கொண்டு விட்டதாகவும், பத்திரிகைகளில் கண்ட சேதிகளாலும் நேரில் விசாரித்த விசாரணையினாலும் தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கைகளைக் கண்டித்துப்பொதுக்கூட்டம்போட்டுதீர்மானங்கள் செய்திருப்பதாகவும், இனியும்

...பலஇடங்களில்போலீசாரின்இவ்வித அயோக்கியத்தனமான காரியத்தைக் கண்டித்தும் இந்த சப் இன்ஸ்பெக்டர் மீது தக்க நடவடிக்கை எடுத்து அவருக்குப் புத்தி கற்பிப்பதுடன் இனி எந்த போலீஸ்காரரும் இவ்வித மடத்தனமும் அயோக்கியத்தனமும் பார்ப்பனர்களுக்கு குலாமாயிருந்து இவ்வித இழிவான காரியமும்செய்யாமல் இருக்க எச்சரிக்கும்படியும் அதிகாரிகளுக்குத் தெரிவிப்பதாக தீர்மானங்கள் பலர் செய்திருப்பதாகவும் இனியும் செய்யப்போவதாகவும் தெரிய வருகின்றது.

போலீஸ இலாக்காத் தலைமை அதிகாரிகளும் நிர்வாக இலாக்காத் தலைமை அதிகாரிகளும் இதைப்பற்றி இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்பதைப் பார்க்கலாம். என்றாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அந்த "ஜாதி"யார் அந்த "ஜாதி"ப்புத்தியைத்தான் காண்பிப்பார்கள். ஒருவர் செய்த அயோக்கியத்தனத்தை அதே உத்தியோகத்தாயிக்குப்பிறந்த மற்றொருவர் அதை மூடிப்பூசிமெழுகும்முறையில்தான் காரியம்செய்வார்கள். 100ல்ஒருவர் 1000ல்ஒருவர் உத்தியோகஜாதி அபிமானத்தையே பிரதானமாய்க் கருதாமல் ஞாயம் செய்தாலும் செய்வார்கள். ஆதலால் அதைப்பற்றிக் கவலையில்லை.

ஆனால் சட்ட சபைப் பிரதிநிதிகள் என்கின்ற முடத்தெங்குகள் கோழிக்குஞ்சுகள் பொரித்ததுபோல பொல பொல வென்று நூற்றுக்கணக்கான மக்கள் பொது ஜனப் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டும் பட்டம் பரிவட்டங்கள் பெற்றுக்கொண்டும் பொதுஜனங்கள் பேரால்-பொதுஜனங்கள் பணத்தில் படிச்செலவு செய்துகொண்டும்வாழ்கின்ற இந்த ஜனப்பிரதிநிதிகள் என்பவர்கள் இந்த இருபது நாளாய சட்டசபையில் இதைவிட வேறு என்ன வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்பதுதான் நமது வேடிக்கைக் கேள்வியாகும்.

தோழர் கே. பாஷ்யமஐயங்காரையும் மற்றும் ஏதேதோ அனுமதேய மாம்ச பிண்டங்களையும்பற்றி "அவரையேன் அடித்தார்கள்" "இவருக்கு ஏன் மோர் கொடுக்கவில்லை" என்பது போன்ற பலகேள்விகள் கேட்டு தோழர் சர் உஸ்மான் தயவையும் தோழர் கிருஷ்ணய்யர் தயவையும் பெற்ற இந்தப் புலிகள் இந்தமாதிரியான அநாவசிய பொதுஜன சேவை செய்கின்றவர்களும் ஏழை மக்களுக்காகவும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தங்கள் சொந்தப்பணத்தை செலவு செய்துகொண்டு யாதொரு சுயநலமும் எதிர்பாராமல் பாடுபடுகின்ற மரியாதையான வாழ்க்கையுள்ள மக்களை இம்மாதிரி தெருவில் நடக்கும்போது குடிகாரன் வெறிகாரன்போல் ஓடிமரித்து சத்திரிக்காய்ப்பட்டணம்போல் கன்னங்கன்னமாய் பல்லில் ரத்தம் வரும்படி அடிக்கின்றது என்றால் இதைப்பற்றி ஒரு கேள்வியாவது கேட்கவோ ஒரு அவசரத்தீர்மானமாவது கொண்டு வரவோ வேண்டியது அவசியமில்லாமலும், அவசரமில்லாமலும் போனதுதான் நமக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. தீண்டப்படாத வகுப்பைச்சேர்ந்தவர்கள் என்பவர்களுக்குக்கூட இதைப்பற்றிய உணர்ச்சி இல்லாமல் போனது நமக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. இதிலிருந்து நாம் ஒன்றுதான் சொல்ல முடியும். அதாவது அரசாங்கம் என்பதும் ஜனப்பிரதிநிதிஎன்பதும் ஒரே யோக்கியதை உடையதுதான் என்றும் அரசாங்கம் என்பது ஏழை மக்கள் என்னும் பிணத்தைத்தின்னும் குள்ளநரி என்றால் பொதுஜன பிரதிநிதிகள் என்பவர்கள் அப்பிணத்தைக்கொத்திக்கொத்தி தின்னும் கழுகுக்கு சமானமானவர்களே ஒழிய நரியை விரட்டுகின்றவர்கள் அல்ல என்றுதான் முடிவு செய்கின்றோம்.

காரைக்குடியில் ஈ. வெ. ராமசாமி.

தோழர் ராமசாமி அவர்கள் காரைக்குடியில் செய்த சொற்பொழிவும், தேவகோட்டை, தென்மாப்பட்டு, திருப்பத்தூர், சிவகங்கை முதலியவிடங்களில் செய்த சுற்றுப்பிரயாண விபரமும் அடுத்தவாரம் வரும்.

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்க வாசகசாலை திறப்புவிழா.

ஈரோடு சுயமரியாதை வாலிபர் சங்க காரியாலயமும், அதைச் சார்ந்த வாசகசாலையும் 28-3-33 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு ஈரோடு லார்டு நேப்பியர் வீதி முனிசிபல் லேன் பலசரக்கு கடைகளின் மேன்மாடி கோட்டகையில் துவக்கப்படும்.

ஈரோடு முனிசிபல் சேர்மென் தோழர் கான்சாஹிப் கே. ஏ. ஷேக்தாவுது பகதூர் அவர்கள் திறப்புவிழாவாற்றுவார்கள்.

தோழர்கள் யாவரும் விஜயம் செய்து சிறப்புவிக்க வேண்டுகிறோம்.

T. D. கோபால்,
H. பாஷா.
காரியதரிசிகள்,
சுயமரியாதை வாலிபர் சங்கம்,
ஈரோடு.

திருவாரூர் கள்ளர்குல இளைஞர் மன்றத்தில் முத்துசாமிவல்லத்தரசுக்கு உபசாரப்பத்திரம்.

வல்லத்தரசுபதில்.

(சென்றவாரத்தொடர்ச்சி)

கல்வி.

இவ்வளவுஜமீன்தார்கள் பாளையப்பட்டுகள், பணக்காரர்கள், மிட்டாதாரர்கள் முதலியவர்களிருந்தும், நாமும் இம்மாகாணத்தில்ஏழுலட்சம் ஜனத்தொகை கொண்டவர்களாக காணப்பட்டும்நமக்குள் படித்தவர்கள் எத்தனைபேர், பொது ஊழியம்செய்ய முன்வந்துள்ளவர்கள் எத்தனைபேர், என்றுதான் நான் உங்களைக்கேட்கிறேன். இன்று நம் அரசாங்கத்தார் பத்து வருடங்களாக வருடம் ஒன்றுக்கு ஒன்றரை லட்ச ரூபாய் செலவில் Cala Reclamation கள்ளர் பாதுகாப்புக்கழகத்தை ஏற்படுத்தியும், நடத்திவருவதில் அதன் மேலதிகாரிகள் மேல்ஜாதியினராய் இருப்பதினால் நமது குழந்தைகளின் கல்வி அபிவிருத்திக்குக் குந்தகம் ஏற்படுகிறது. நம்மவர்களை குற்றம் புரியும் வகுப்பினர்களாகக் கருதி நம்மை அரசாங்கம் நடத்தும்விதம் மிகவும் கண்டிக்கத்தக்கது. நமது குல ஸ்திரீகளை மிகவும் இழிவாக கருதி நடத்துகிறார்கள். அந்த இலாகாவை நமது குலத்தினர்களில் பலபிரபலஸ்தர்களைக்கொண்டு நடத்தினால் மிகவும் சிறப்பாகவும்,முன்னேற்றமாகவும்உண்டு என்று கருதுகிறேன்.

குலமுன்னேற்றம்.

நமது குலமக்கள் முன்னேற்றமடையவேண்டுமானால் ஆங்காங்குள்ள நமது குல ஏழை மக்களுக்கு கல்வி, கைத்தொழில், கற்றுக்கொடுக்க போதிய சாதனங்கள் ஏற்படுத்த வேண்டும். சட்ட சபை ஸ்தலஸ்தாபனம்முதலியவைகளுக்கு நமது குலத்தில் கல்வியில் முற்போக்குடையவர்களை அனுப்பவேண்டும். பணக்காரர்களை அனுப்பினால் பயனில்லை. இந்த ஜில்லாவில் நீங்கள் பதினையாயிரம் பேராய் இருந்தும் இதுவரையில் சட்டசபைக்கு ஓர் பிரதிநிதியைத்தேர்ந்தெடுத்து அனுப்ப முடியவில்லை என்றால்நமது அறியாமையையும், அடிமை புத்தியையும் காட்டுகிறதன்றோ! இனிவரும் தேர்தலில் தோழர்ராமலிங்கசாமிபோன்றகல்வியாளரை தேர்தலில் நிறுத்தி வெற்றியடையும்படி செய்யவேண்டியது உங்கள் கடமை என்று உணருங்கள்.

சட்டசபையில்நமதுபிரதிநிதிகள்இருந்தால் நமக்காக போராடுவார்கள். காங்கிரஸ் அன்னியர் ஆட்சி வேண்டாம் என்று சொல்லுகிறது. ஆனால் நான் ஒன்று கேட்கின்றேன். முகமதியர்கள் கிறிஸ்துவர்களைப்போல் இன்று கூச்சலிடும் மற்றும் பல வகுப்பார்களும் இந்நாட்டில் குடியேறியவர்கள்தானே ஆதலால் அப்படிப் பட்டவர்களும் இந்நாட்டைவிட்டு வெளியேறவேண்டாமா? என்று கேட்கின்றேன்.

நமது சமூகங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் "அன்னியர் ஆட்சி ஒழியவேண்டு" மென்றால் அதில் ஏதாவது அர்த்தமோ கடுகளவாவதுயோக்கியதையோ, நாணயமோ இருக்கிறதாவென்று யோசித்துப்பாருங்கள். நம்முடைய சக்தியும், யோக்யதையும் பிற சமூகங்கள் அறியவும், அவர்களுடன் சகோதரபான்மையுடன் நடந்துகொள்ளவும், உங்களுக்கென்றுஒருதனி ஸ்தாபனம்வேண்டுமென்று சொல்லுகிறேன். இவ்வழிகளையடைய மற்ற சமூகங்களைப் போல் முன்னேற்ற கல்வி அபிவிருத்தி அவசியம் வேண்டும்.

புதுக்கோட்டையில் எங்களுடைய முயற்சியால் ஒரு லட்ச ரூபாய் மூலதனம் வைத்து கல்வி அபிவிருத்திக்காக ஆறு வருடங்களுக்கு முன் ஏழை மாணவர் விடுதி ஒன்றை ஏற்படுத்தினோம். அதில் நூறு ஏழைமாணவர் வரையில்சேர்த்தோம். அவர்களில் ஐம்பது பேர் வரையில் நமது குலகுழந்தைகள் அவர்களுக்கு உண்டி, உடை, கல்வி, இனமாக அளிக்கப்படுகின்றது. இன்று அவர்கள் 8, 9, 10-வது வகுப்புகளில் வாசித்து வருகிறார்கள். ஆகையால் நீங்கள் உங்கள் ஜில்லாவிலும் தலைகட்டுவரி போட்டு இதைப் போன்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீங்கள் பழைய குருட்டு வழக்கங்களையும் விடவேண்டும். ஸ்திரிகளுக்கு மறுமணம் செய்துகொள்ள அனுமதிகொடுக்கவேண்டும். இன்னும் மதுரை ஜில்லாவில் சதிபதிகள் ஒத்துவாழாவிட்டால் தலைகீழாக ஓர் வைக்கோலை எடுத்துக் கிழித்துப் போட்டுவிட்டு பந்தத்தை

நீக்கிக்கொண்டு மறுமணம் செய்து கொள்ளுகிறார்கள். நீங்கள் கல்யாணத்தில் பரிசம் வாங்குவதை நீக்க வேண்டும். இதனால் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் முன்னூறு குடும்பங்கள் வரையில் இவ்வழக்கத்தினால் நாசமடைந்து இருப்பதைக் காண என் மனம் புழுங்குகிறது. இந்தக் கொடிய வழக்கத்தை நமது சமூகத்தை விட்டு அறவே ஒழிக்க வேண்டும்.

மாட்டு வேடிக்கையும் விட்டுவிட வேண்டும். இதனால் வீண் சச்சரவுகளுக்கு இடம் ஏற்படுகிறது. இதனால் படித்த பார்ப்பன வக்கீல்களுக்குத்தான் லாபம். நம்மவர்களுக்கு பொருள் விரயமும் அவமானமும் ஏற்படுகின்றதேயன்றி லாபம் இல்லை.

நமது குலத்தவர்கள் சாதிப் பட்டத்திற்கு சண்டையிடுவதை நிறுத்திக்கொண்டு ஒன்றுபட்டு சங்கங்களை ஸ்தாபித்து உழைக்கவேண்டும். நமது வெங்கிடுசாமி நாட்டாரவர்கள் நமக்கு 350 பட்டப் பெயர்கள் உண்டென்று கூறுகிறார். பட்டப்பெயர்களைத் தரித்து வர்ததினால் நாமடைந்த பயன்யாது.

என்னைக்கேட்டால் நான் கோவிலுக்குப் போகவேண்டாம். வீண் சடங்குகளுக்கு டாம்பீக செலவுகள் செய்யவேண்டாம்: சமயக்குறிகள் வேண்டாம். ஜாதிப் பெருமைவேண்டாம், என்று சொல்லுவதுடன் இவைகளுக்காகச் செலவிடும் நேரத்தையும் பணத்தையும் நமது குல அபிவிருத்திக்கும், குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்கும் செலவழிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். பிறகு புதுக்கோட்டையில் நடந்த கலவரத்தைப்பற்றி பேசி முடித்தார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் தியாகராஜன் அவர்களால் வந்தனம் கூறியதும் இரவு 8 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்.

19-3-33. தேதி மாலை 5மணிக்கு சங்கக்கட்டிடத்தில் வாராந்திரக்கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு சங்க அங்கத்தினர்களும், பொதுமக்களும் குழுமியிருந்தார்கள். கூட்டம் சங்கத் தலைவர் அவர்களின் தலைமையின்கீழ்நடைபெற்றது. பின் தோழர்களான டி. எ. எஸ். லிங்கம், லிங்கம், எஸ். கே. வரதராஜுலு முதலியோர் தற்கால நாகரீகமும், பெண்மக்கள் சுதந்திர அவசியமும் என்னும் பொருள் பற்றி உருக்கமானதோர் சொற்பொழிவு வாற்றினார்கள்.

பின்னர் தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபச்சாரத்துடனும்கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

பட்டுக்கோட்டை பனகாலரசர் வாசகசாலை.

21-3-33-ல் இரவு 8-30 மணிக்கு தோழர் பி. எஸ். வைதியநாதன் தலைமையில்ஓர்வாராந்திரக்கூட்டம் கூடியது. தலைவர் முகவுரையில் "வாலிபர்களின் முன்னேற்றம்" யென்பதுபற்றி பேசிய பின்னர் தோழர் டி. வி. டேவிஸ் பி. ஏ. அவர்கள் "தற்கால சுயமரியாதை" யென்பது பற்றி பேசிமுடித்தார். பின் தோழர் கே. எஸ். சிவராமகிருஷ்ணன் "சோஷலிசம்" யென்பது பற்றிப் பேசிய பின்னர், தோழர்கள் பி. எஸ். லிங்கம், ஆர். தங்கவேல் முதலியவர்கள் "சங்க முன்னேற்றம்" யென்பது பற்றிப் பேசி முடித்தனர். இறுதியாக தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

திருச்செங்கோடு தாலூக்கா கோக்கலை ஆதிதிராவிட வாலிபர்சங்கம்.

11-3-33-ல் மாலை 6மணிக்கு ஷை சங்கத்தின் ஆதரவில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தில் வாலிபர்களும், பெரியோர்களும் விஜயம் செய்தார்கள். கூட்டத்திற்கு ஷை சங்கத் தலைவர் தோழர் கே. எஸ். கந்தசாமி யவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

பின் சங்கத்தலைவர் முன்னுரையில் சங்கத்தின் அவசியத்தைப் பற்றிப்பேசினர்.

பின் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்தபின் தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது

(ஒரு நிருபர்)

திண்டுக்கல் பகுத்தறிவாளர் சங்கம்.

9-3-33ல் மாலை 6மணிக்கு "கமல விலாஸ்" தொழிற்சாலையில் ஓர் விஷயாலோசனைக் கமிட்டிக்கூட்டம் கூட்டப்பட்டு கீழ்கண்ட விஷயங்கள் தீர்மானிக்கப்பட்டன,

(1). பகுத்தறிவாளர் சங்கம் ஒன்று இந் நகரில் கூடிய விரைவில் ஸ்தாபிப்பது.

(2). ஷை சங்கத்திற்கும், நேர்தலும் முதலியவைகளும் நாளது 19-3-33ல் ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு ஷை "கமலவிலா" வில் கூடும் ஜெனரல் பாடி கூட்டத்தில் தீர்மானிப்பது.

(3). சுயமரியாதைத் தோழரும், சிவகெங்கை வக்கீலுமான தோழர் எஸ். இராமச்சந்திரன் பி. ஏ. பி. எல். அவர்களின் அகால மரணத்தைக் குறித்து இக் கூட்டம் வருந்துகிறது.

(ஒரு நிருபர்)

ஈரோட்டில் "இந்து" பெண்ணுக்கும் "கிறிஸ்துவ" மாப்பிள்ளைக்கும் சுயமரியாதைத் திருமணம்.

சென்ற 22-3-33ந்தேதி புதன்கிழமை மாலை5-30மணிக்கு தோழர் ஈ. வி. ராமசாமி அவர்களின் சத்திரத்தில் தோழர் பாக்கியநாதன் அவர்கட்கும், தோழர் சின்னராமாயிஅம்மாள்அவர்களுக்கும், சீர்திருத்தக் கலப்பு மறுமணம் நடைபெற்றது.

திருமணத்திற்கு சுமார் 150பேர் கட்டுமேல் விஜயம் செய்திருந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்கள், தோழர் ஈ. வெ. இராமசாமி, ஈ. வெ. கிருஷ்ணசாமி, ஈ.வெ.கி.ரங்கநாயகி அம்மாள், எஸ்.ஆர்.கண்ணம்மாள் முனிசிபல் கௌன்சிலர், டாக்டர் எம். கிருஷ்ணசாமி, எம். ஈஸ்வரன், டி. டி. கோபால், ரத்தினசாமி, ஈ. வி. ஜெயராம், ஈ. வி. லக்ஷ்மணசாமி, என். ஈசுவரதசாமி, எம். ஷண்முகம்பிள்ளை, எஸ். ஆர். ஆத்தியப்பன், எ. பாபுசாமி, எ. ரத்தின சபாபதி, ஈ. ஆர். சுந்தரம் ஐயர், சேஷாத்திரி ஐயங்கார் சென்னை ஸ்மான் ஸ்டீல் கம்பெனி சொந்தக்காரர், வேல்சாமி, வரதன், எம்.கே.முத்தலிப், நெல்லையப்பர், மனுவேல், எ. சங்கரன், தென்னம்பட்டி ரங்கசாமி ரயில்வேபோலீஸ், எஸ். குப்புசாமி, காத்தமுத்து, நாகலிங்கம், இன்கம்டாக்ஸ் ஆபீஸ் கிளார்க்குகள், ஷை ஆபீஸ் ஹெட்கிளார்க், இன்னும்பல வாலிபர்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

இத்திருமணத்திற்கு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களை தலைமைவகிக்க வேண்டுமென்று தோழர் டி. டி. கோபால் பிரரேபிக்க தோழர் எம். ஈ. ஈஸ்வரன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு கரகோஷத்தினிடையே ஆசனத்தமர்த்து முகவுரையாக மணமக்களைப்பற்றி பேசியபிறகு புஷ்பமாலைமாற்றிக்கொண்டு தங்களது ஒப்பந்தங்களைச்சொல்லியபின் திருமணம் நடந்தது பிறகு தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்களை பேசும்படி தலைவர் கேட்டுக்கொண்டார். பின் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மணமக்களின் வரலாற்றைப்பற்றியும், மேல்நாட்டில் நடைபெறும் மணங்களைப்பற்றியும், மணவிஷயத்தில் ஏற்பட வேண்டிய சீர் திருத்தங்களைப்பற்றியும் விரிவாக பல உதாரணங்களுடன் பேசி திருமணத்தை ஆதரித்தார். தோழர் எ. ரத்தினசபாபதி அவர்களும் மணத்தை ஆதரித்துப் பேசினர். தலைவர்முடிவுரையுடன் தோழர் டி. டி. கோபால் வந்தனோபசாரம் கூறியதும் கற்கண்டு சந்தனம் வழங்கிய பின்திருமணம்இனிதுமுடிந்தது.

குறிப்பு:—இத்திருமணத்தில் மணமகளுக்கு முன்னமே விவாகமாகி இருக்கிறது. அப்பெண்ணின் பழய புருஷனுக்கு இன்னும் இரண்டுசம்சாரம் இருக்கிறது. இத்தம்மாள் மூன்றாவது மனைவியாக இருந்ததால் விட்டுவிட்டு வந்து வேறு திருமணம் செய்துகொண்டாள். மணமகனுக்கு முன்னமேயே ஒரு சம்சாரம் உண்டு. அவர் "கிறிஸ்துவர்" அப்பெண்ணை அவர் இஷ்டப்படவில்லை. ஆதலால் இத்திருமணம் செய்துகொண்டார்

(நமது நிருபர்)

சென்னையில் ஆர். கே. ஷண்முகத்திற்கு பாராட்டு.

சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்களைப் பாராட்டுவதற்காக 19-3-33ல் தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தலைமையில் சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் சார்பாக நடைபெற்றது.

தலைவர் முன்னுரையாக தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் செய்துள்ள வேலைகளைப் பற்றியும் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டியும் பேசினர் பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

"தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டதைப் பாராட்டியும், அவருக்கு ஆதரவளித்த இந்திய சட்டசபை அங்கத்தினர்களையும் மேன்மை தங்கிய வைசிராய் அவர்களையும் பாராட்டுகிறதென்ற" தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

(ஒரு நிருபர்)

தஞ்சை சுயமரியாதைச்சங்கம்

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் 19-3-33ல் தோழர் பிரதாபன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் சக்கரவர்த்தி, பி. ஏ அவர்கள் "மக்களுக்கு மூடநம்பிக்கை எவ்வாறுண்டாயிற்றென்பதை" ப்பற்றிப் பேசியபின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் இந்திய சட்டசபைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பாராட்டியும், இச் சங்கத்தின் கூட்டம் வாரா, வாரம் கூட்ட வேண்டுமென்றும், இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்

செட்டிநாட்டு நகரத்தம்பதிகள் மலாய்நாட்டுக்கு புறப்பாடு.

காரைக்குடி சு. மு. ராம, முத்து ராமன் செட்டியார் அவர்களும், அவரது துணைவியார், திருமதி மீனாக்ஷி ஆச்சி அவர்களும் மலாய் நாட்டுப் பகுதியிலுள்ள (கோலப்பிறை) என்ற ஊருக்குப்புறப்படுவதற்காக 24-3-33 காரைக்குடியிலிருந்து புறப்படுகிறார்கள். இவர்கள் நாகையினின்று 1-4-33 அன்று புறப்படும் கப்பலில் பிரயாணமாகுர்கள் என்று தெரிகிறது. இத்தம்பதிகளை அவர்கள் உறவினர்களும், தோழர்கள்ராம சுப்பையா அ. பொன்னம்பலம் முதலியோர்களும் சென்றுவழியனுப்பிவைத்தார்கள்.

(ஒரு நிருபர்)

நோட்டீஸ்,

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-ளு அசல் நெ. 732.
1933ளு நிறைவேற்று நெ. 247
ரங்கேகவுண்டன்—வாதி

பல்லடம் தாலூகா கருமுத்தம்பட்டி. மகா-ா-ா-ஸ்ரீ ஏளச்சிபாளையத்திலிருக்கும் சின்னிய கவுண்டன் மகன் இராமேகவுண்டன்—பிரதிவாதி.

ஷை கெம்பரில் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கடன் ஜெப்தியான ஸ்தாவர சொத்துக்களை ஏலம் போடவேணுமாய் மனு கொடுத்து கிஸ்தியாரில் கண்ட சொத்துக்களை ஏலம் நிர்ணயிப்பதற்காக 1933ளு ஏப்ரல்மீ 1வ வாய்தா போடப்பட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி பகல் 11மணிக்கு ஆஜராகவேண்டியது தவறினால் ஒரு கக்ஷியாக முடிவு செய்யப்படும் என்கிற சங்கதியை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

ஜி, ஆர். ஜெகதீசசாஸ்திரியார்,
வாதி வக்கீல்.

மணமகள் தேவை.

இங்கிலீஷ் கம்பெனியில் குமஸ்தா உத்தியோகத்தில் மாதம் 65 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடியவரும் சுமார் 28, 29 வயதினையுடைய வாலிபருக்கு பெண்தேவை. பெண் இங்கிலீஷ், தமிழ் படித்த நாடார் குலம் வயது 20-க்கு மேற்படாமலிருக்கவேண்டும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. S. S.
C/o. குடி அரசு ஈரோடு.

அகில இந்தியா டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி.

(govt Rgd)

உங்களுடைய டிரேட் மார்க்குகள், பெயர்கள், காப்பிரைட் முதலியவைகளை பிறர் உபயோகித்து உங்களுடைய நற்பெயரின் பயன்களையும் லாபங்களையும் அன்னியர் அடையாமல் இருக்கும் பொருட்டு 1908ம் வருஷத்திய XVI செய்பர் ஆக்டுப்படி இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்டர் செய்து கொள்ளுங்கள். முழு விபரங்களுக்கு எழுதவும்.

ஏஜெண்டுகள்:—
கே. எல். ஜி. குப்தா அண் கோ.,
கடைவீதி, ஈரோடு.

ஈ. வெ. இராமசாமி.

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேல்நாட்டு, அதாவது ரஷியா, பிரான்ஸ், ஜெர்மனி, டர்க்கி, கிரீஸ் கொழும்பு முதலிய இடங்களில் நமது இயக்க சம்பந்தமான தலைவர்களுடன் உட்கார்ந்து எடுத்த போட்டோக்கள் கீழ்க்கண்ட சைஸ் பிரகாரம் விலைக்கு விற்கப்படும்.

$6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ தோழர்கள் ஈ. வெ. ரா. நாகம்மையாரும், ஈ. வெ. ராமசாமி அவர்களும் சேர்ந்திருக்கக்கூடிய தனிக்காப்பி 1க்கு 0-8-0

ஷை $8\frac{1}{2}$ x $6\frac{1}{2}$ சயிஸ் 1க்கு 0-12-0

ஐரோப்பாவில் எடுத்த $6\frac{1}{2}$ x $4\frac{3}{4}$ சயிஸ் தனிப் போட்டோ burst 1க்கு 0-8-0

15 x 12 என்லார்ஜ்மெண்டு ஷை காப்பி 1க்கு 10-0-0

23 x 17 ,, ,, 17-0-0

தனிக்காப்பி வேண்டுபவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 6-4-0 ரூ. விதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

விலாசம்:—
நியூஸ்டார் போட்டோஸ்டுடியோ,
ஸ்டேன்ஸ் ரோட்,
கோயமுத்தூர்.

குஷ்டம்

வெண்குஷ்டம் பந்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பாரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

மணமகள் தேவை.

இருபத்திரண்டு வயதுடையவரும் பூரண சுயமரியாதைக் கொள்கையுடையவரும், மதராஸ் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்தவரும், இலங்கையில் தேயிலை தோட்டத்தில் கிளார்க் வேலை செய்பவரும் மாதமொன்றுக்கு ரூ. 80. சம்பளமுடையவருமான இந்து நாடார் வாலிபரொருவருக்கு ஒரு மணமகள் தேவை. கீழ்கண்ட விலாசத்திற்கு பிரியமுள்ளவர்கள் எழுதவும்.

சீர்திருத்தப்பிரியன்,
C/o குடி அரசு, ஈரோடு.

சுகானந்த பானச்சூரணம்.

தேசஷண்முர்த்தி தமிழ் வைத்தியசாலையில் தயார் செய்யும் சுகானந்த பானச்சூரணம் காபி பானத்திற்குப் பதிலாகத் தயார் செய்தது. அனேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ளது. காபியின் மணம் கலந்துளது. இரத்த சுத்தி, ஞாபகசக்தி, வேலையில் சுறுசுறுப்பு முதலியவைதரவல்லது.

காபிபானத்திற்குப்பதிலாக அநேகர் வேண்டுதலின் பேரில் தயாரிக்கப்பெற்ற இச்சூரணம் காப்பித்தூளைப்போல கொதி தண்ணீரில் போட்டு கஷாயமெடுத்து பாலுடன் கலந்தாவது அல்லது தனிப்பாலை காயவைத்து அதில் ஒரு தேக்கரண்டி அளவு சூரணம் போட்டு சர்க்கரை கூட்டிக்கலந்து பருகிவரின் வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம் பலஹீனம் முதலான அனேக வியாதிகளைக்கண்டிக்கும்.

எமது "சுகானந்த பானச்சூரணம்" ஒன்றே பொருத்தமாயுளது. காலை மாலை இரண்டு நேரங்களிலும் மற்றும் தேவையான நேரங்களிலும் உபயோகிக்கலாம். இன்றே ஒரு டப்பி வாங்கி உபயோகித்து உண்மையையுணருங்கள்.

அன்பர்கள் இச்சூரணத்தைக்கொண்டு காபி, டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக உபயோகித்துவரின் காபியை மறந்து காபியின் கெடுதல் குணம் நீங்கப்பெற்றுஇச்சூரணத்தின் அபூர்வ சக்தியினால் அநேக வியாதிகளுக்குக் காரணமாகிய மலச்சிக்கல் நீங்கப்பெற்று ஆரோக்கிய வாழ்வு பெறுவார்களென்பது நிச்சயம். எமது வைத்தியசாலையிம் எல்லா வியாதிகளுக்கும் எந்த நேரத்திலும் மருந்துகள் கிடைக்கும். இங்ஙனம்,

நா. நமசிவாயம், (நேட்டிவ் டாக்டர்)
தேசஷண்முர்த்தி தமிழ்வைத்தியசாலை,
திருக்கோஷ்டியூர், ராமநாதபுரம் ஜில்லா.

சமயத்தை இழந்துவிடாதீர்கள்.

தபால்மூலம் தமிழ்கற்று, பட்டம் பெறலாம்.

சென்னை சர்வகலா சங்கத்தாரால் தனித்தமிழ் "வித்வான்" பட்டம்பெற நடத்தப்படும், பிரவேசம், பூர்வாங்கம், முடிவு, பரீட்சைகளுக்குக் குறைந்த சம்பளத்தில் சிறந்த வித்வான்களைக்கொண்டு தபால் மூலமாய்க்கற்பிக்கப்படும். ஓரளவு தமிழ்ப்பயிற்சியுடைய வயதுவந்த யாவரும் கற்று வித்வான் பட்டம் பெறல்கூடும். முடிவு பரீக்ஷையில் முதன்மையாகத்தேர்வோருக்கு ரூ. 1000பரிசுஅளிக்கப்படுகிறது. உடனே முயற்சி செய்யுங்கள். மற்ற விபரங்கட்கு $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

வித்வான் ஆர். எஸ். மயில்சாமி
காரியதரிசி, தமிழ் வித்வான் பயிற்சிக்கலாசாலை,
கோமங்கலம்புதூர், (via) உடுமலைப்பேட்டை.

கத்தோலிக் குருக்களின் ஏமாற்றம்!

தீண்டப்படாத கிறிஸ்துவர்களே ஏமாறுதீர்கள்.

——:0:——

(திருச்சி யோ. அ. தாஸ்)

தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்கு முயற்சித்து, கிளர்ச்சிக்கூட்டம், மகாநாடு, புதியகட்டுப்பாடு, முதலியவை செய்துவருகிறதைக்கண்டு, கத்தேலிக்கமத குருக்கள் தங்களால் ஆனஎல்லாவித முயற்சிகளும் செய்து தீண்டாமையை நிலைநிறுத்த பல ஊர்கிராமங்களிலும் தங்கள் சகாக்களால் குழப்பங்களையேற்படுத்தியும் குழப்பங்களுக்கு தங்கள் வைதீக சகாக்களால் ஏவுதல், தூண்டுதல் செய்துக்கொண்டும் தீண்டப்படாத கிறிஸ்துதுவர்களை அடிதடி, கத்தி, போர்களுக்குள்ளாகி கோர்ட்டு கச்சேரிகளில்யேற்றி ஓட்டாண்டியாக்கியும் இன்னும் பலரை அவ்விதம் ஆக்குவதற்கு முயன்றுகொண்டும் பற்பல ஏமாற்றங்கள் செய்துக்கொண்டு வருகிறதும் துண்டுபிரசாங்கள்வாயிலாகவும் பத்திரிகைகள்வாயிலாகவும்மலிந்துகிடக்கின்றது. அதுபோலவே திருச்சி ஆலமரத்தெருவில் 21-2-33ல் நடந்த பொதுக்கூட்டத்தன்று பங்குசுவாமி றெனல்ட் இக்கூட்டத்தை தடுக்க போலீஸ் ஸ்டேஷனில், (பொய்கம்ளேயின்ட்) "ராஜதுவேஷமாக கத்தோலிக்மத கோவிலின்முன் கூட்டம்கூடி பேசிகலகம்செய்ய எத்தனிக்கிறார்கள். (cannala) (கானல்லா) படித்தெருக்கோவில்கள் எனக்குச்சொந்தம் ஆகையால் கூட்டத்தை தடுக்கவேணுமென்று"நாக்குகூசாமல்உண்மையை மறைத்துஎழுதியதால்போலீஸ்அதிகாரிகளால் கூட்டம் மற்றொருபுரம்மாற்றப்பட்டது. எவர்க்கும் தெரியாததன்று அத்துடன் வைதீகர்களில் சிலரை தம்வசப்படுத்தி 7-3-33ல் அன்றுவரை கோயிலையும் பூட்டி அடைபட செய்துவிட்டார். 8-3-33ல் விடியற்காலை 5மணிக்கு டி தெருவிற்குள்வந்த வைதீகர் சிலரைவரவழைத்து தாம்இலவசமாக பூஜை வைக்கிறோம். என்று தெரிவித்து ஜனங்கட்கு தெரிவிக்கும்படியாய் பண்டாரத்து கையில் மணியை கொடுத்து சந்து பொந்துக்களெல்லாம் மணி அடித்து பூஜைவைத்து முடித்தார். வைதீகபெண்களும், ஆண்களும் சுமார் 20பேர் பூஜைக்கு வந்திருந்தனர். ஐயோபாவம், இந்த சாமியார் இங்கு இலவசமாய் பூஜைவைத்து என்னமன இரக்கம்! தெருக் கோவில்களில் 7½ரூபாய் வாங்கி பூஜைவைக்கும் வழக்கத்தை விட்டுவிட்டு இன்றுமுதல் இலவசமாய் பூஜைவைத்து சிலவைதீகர்களை தம், மாயவலையில சிக்கவைத்து கோவிலை எழுதிவாங்கிக்கொள்ள எண்ணிக்கொண்டிருக்கிறார்போலும், இதுகுருடன் கண்ட, கனவை யொக்கும். இன்னும் ஒருவரை கோவில் வேலைப்பார்க்க மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஐந்துசம்பளம் பேசி இருக்கிறாராம். அன்றுபிரசங்கத்தில் சுயமரியாதைக்காரரிடம் பேசக்கூடாதென்றும், சேரக்கூடாதென்றும் அவர்கள் கொள்கைகளை அனுசரிக்கக்கூடாதென்றும் அவர்கள் கடவுள் இல்லையென்றும் மோட்சம் இல்லையென்றும் சொல்லுகிற கூட்டத்தாருடன் நீங்கள் சேர்ந்தீர்களானல் நரகத்திற்கு பாத்திரவான்கள் ஆவீர்களென்றுபயமுறுத்தி ஒரு மணிநேரமாக பேசிமுடித்தார். பார்ப்பனர்கள்தெர்ப்பைப்புல்லாலும், செம்பு ஜலத்தாலும் இந்திய பாமரமக்களை ஏமாற்றின காலமும் கிறிஸ்துவகுருக்கள் ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்து சிலுவை அடையாளமென்னும் ஆசீர்வாதத்தால் ஏமாற்றின காலமும் இந்த இருபதாம்நூற்றாண்டில் மலையேறிப்போய் விட்டதென இவர்கள் எண்ணமற்போனதென்ன? இதுபோலவே சிலதினங்களுக்குமுன் திருச்சி தேவதானத்திலும் இந்த குருக்கள் செய்திருக்கிறார். திருச்சி சிந்தாமணி பிரட்டம்பத்திரி, முதலிய தெருக்களில் வைதீகர்களைக்கொண்டும்குருக்கள் ஊதியத்தால் பிழைப்பவர்களைக்கொண்டும், கலகப்படுத்திக்கொண்டு, ஜனங்களை மிரட்டி, உருட்டிக்கொண்டும் வருக்கிறார்கள். வைதீகர்களுக்கு திர்ப்போதனையாக நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். போலீஸ், கோர்ட்டுகளுக்கு நான் இருக்கிறேன் என்றும் தைரியம் சொல்கிறார். சகோதரர்களே தீண்டாமை ஒழிந்தால் குருக்களின் ஜாண்வயிற்றில் மண்விழுந்து விடுமே என்ற பயம் பீடித்து இம்மாதிரி கூற்றுகள் குருக்களால் நடந்து வருகிறது, ஆனல் தீண்டப்படாத கிறிஸ்துவர்கள் இரண்டாயிர வருஷகாலமாய் மனிதத்தன்மை இழந்து நாயினும் கடையராய் அரசாங்க வேதாங்க உரிமை இழந்து பேருக்கும் எண்ணிக்கைக்கும் கிறிஸ்துவர்களாக இருக்கிறீர்களே? என்பதை நினைக்க, குருக்கள் மூளைகளில்மண்ணாய்மாறியது இவர்களைபிடித்திருக்கும் பறைபேய், மாய்கையா, அல்லது கிறிஸ்த்துநாதர் கொள்கையா? என்பதை யோசித்து அறியுங்கள். மூடத்தனம் முட்டாள் பழக்க வழக்கங்களை உதறித்தள்ளிப் பகுத்தறிவைக்கொண்டு ஆலோசித்து எதிர்ப்பு மறுப்புகளுக்கஞ்சாமல் தீவிரகிளர்ச்சி மூலம் உங்கள் வேலைத்திட்டங்களை சரிவர செய்யுங்கள். இது சமயம் தவறுவீர்களானல் இதுபோல் மருசமயமும், பிறர் உதவியும் வாய்ப்பதறிது எழுமீன்! எழுமீன்! குருக்கள் ஏமாற்றுவார்கள், நீங்கள்யேமாறுதீர்கள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

டது. இந்த கெட்டுப் போன பால் வேண்டாம் கெடுதி செய்யுமென்று யான் சொன்னல், எபேடியானலும் பால் தானே, பாலை குறை கூறக் கூடாதென்று சில ஐயமுறுகின்றார்கள் பலர் சீற்றங் கொள்ளுகின்றனர்.

சமயப் பற்றானது சமூக ஒற்றுமையை, சமூக முன்னேற்றத்தை வளர்க்கும் வரையில் தான் கொள்ளலாமே யன்றி, அவ்வொற்றுமையைக் குறைத்து பிளவுகளை யேற்படுத்தி வறுமையை யுண்டுபண்ணும் போதுமா, அதை ஆதரிக்க வேண்டும்? யோசியுங்கள்.

கடவுளுக்கு "ஏழை பங்காளன்" என்ற பெயரொன்று வைத்து துதிக்கின்றோமல்லவா? 'எதற்காக? வறுமையிலே, இருட்டிலே கிடந்துதவிக்கும் வாயில்லா மக்களுடைய உடலிலும் உயிரிலும் தவிப்பது கடவுள் தான் ஆகையால் அந்த சகோதரர்களுக்குற்ற குறைகளை நீக்குவது தான் ஏழை பங்காளனுன கடவுள் மீது பற்றுவைத்தல், பக்தி செய்தல் என்று பொருள் கொள்ளுகிறோமா? சொல்லுங்கள்.

கடவுள் மாத்திரமா ஏழை பங்காளன்? யாங்களும் ஏழைகளுக்கு பங்காளிகள் தான், அதாவது அவ்வேழைகளிடமுள்ள சொற்ப பொருளையும் பிடுங்கிக் கொள்ளும் உரிமையை யுடையவர்க ளென்றல்லவோ நாம் நடந்துக் கொள்ளுகிறோம்! யோசித்துப் பாருங்கள்.

என்னபிப்பிராயங்க ளெல்லாம் இது போன்ற நோக்கத்தோடுள்ளவைகளே. வேறு பொருள் உங்களுக்குத் தோன்றுமே யானல், அது என் சொல்லேழ் மையினலே யாகும். பொது வியக்கங்களுக்கு வேண்டியது சமநிலையாயமைந்துள்ள அன்பும் அறிவுமேயாகும் இவைகளில் ஒன்று மிகினும் குறையினும் கெடுதியே.

அன்பறிவுடன் ஆராய்ந்தெளிந்து நிச்சயம் செய்ததை நடை முறையில் கொண்டு வரும் ஆற்றலை சம்பாதிக்க வேண்டும். முயற்சி மிக மிக அவசியமானது.

தெளிவடைய வேண்டுமானல் அவாவின்மையும் வேண்டுமென திருக்குறளில் சொல்லப் பட்டிருக்கிறது.

இந்த அவாவின்மையைப் பற்றி யாதொன்றும் சொல்ல முன் வரவில்லை அவாவின்றி மனிதன் எப்படி வினை செய்ய முடியு மென்பது சிந்திக்க வேண்டிய பெரிய வோர் கேள்வி. ஆராவியற்கையுடைய அவாகாரணமாக நல்ல காரியங்கள் நிறைவேறாமல் பேச்சளவில் நின்று போகின்றன வென்பது மாத்திரம் தெரிகிறது. ஒவ்வொருவருடைய அனுபவமும் சொல்லுகிறது. ஆனல் அவாவின்மையால் பேராவியற்கை கிடைக்கு மென்பது என் அனுபவத்திற்கு இன்னும் வரவில்லை. வந்திருந்தால் யான் முன் செய்து கொண்ட அபராத விண்ணப்பங்களுக்கு இடமிருந்திராதல்லவோ?

அவாக்கடலில் முழுகி நிற்கும் நான் அவாவின்மை என்னும் கடலுக்கு மேல் பாயிலிருக்கு மொன்றை எப்படி அறிய முடியும்?

இந்த என் சொந்த அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவது, தாங்கள் அவைகளை அப்படியே எற்றுக் கொள்வதற்காகவல்ல, தாங்களும் அவைகளை ஆராய்ந்து நேர்மையாயுள்ளவைகளை மாத்திரம் கொள்ளுவதற்கேயாம்.

இனி சமூக மகாநாட்டுத் தலைவருடைய பேருரையை கேட்க தங்களுக்கிருக்கும் ஆர்வத்தை விடஎனது ஆவல் குறைவாகவில்லை யாகையால் காலந்தாழ்த்காது, இங்கியேறு கூடியுள்ள நம் குல நான்காவது மகாநாடானது இனிது நடைபெற வேண்டு மென்கிற பேரவாவுடன் இனிது நடைபெறு மென்ற நன்னயிக்கையுடன் சமூக மகாநாட்டைத் திறந்து வைக்கிறேன். எங்கும் என்றும் தங்குக மங்களம்,

---

சுயமரியாதை தத்துவ கீதங்கள்.

கடம்பக்குளம் தோழர் நாராயணன் பாடியது. நல்ல கௌரவமான பாட்டுகள், பாரதியார் மெட்டுகள். தோழர் ஈ. வெ. ராமசாமி படத்துடன் கூடியது. நல்ல காகிதம், நல்ல அச்சு, எளிய நடை விலை அணு, 0—4—0,

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு.

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி

டிக்கோயா சிலோன்,

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

றும், பிறப்புரிமைகளென்றும் பெயர் சூட்டி மானுஷிகத்தை அவமானப் படுத்திக்கொண்டு வருவதை பிரமுகமாகவிட்டும் சமய அதிகாரிகள் குருக்கள், புரோகிதர்கள், குருமார்கள் இவர்களெல்லாம் மெய்யான உலகத்துடன் விவகாரங்கள் நடத்துவது வழக்கமில்லை. தன் கற்பனை விதிகளால் ஏற்படுத்தப் பட்ட கற்பனைஉலகத்துடனே தான் விவகரிக்கிறார்கள். நாம் விரதமென்றும், அனுஷ்டான மென்றும், திருநாளென்றும் தீர்த்தமென்றும், அபிஷேகப் பிரார்த்தனையென்றும், பிராமணபோஜன மென்றும், பாத காணிக்கை யென்றும், இந்த உலகத்தில் அந்த கற்பனை உலகத்தை விவகரித்துப் படுங் கஷ்டங்களினால் அவர்கட்குப் புளியோதரை பொங்கல் ருசி குறைவதில்லை. அபிஷேக நைவேத்தியங்களால் தாசி வீட்டை அலங்கரிப்பது தடைப்பட வில்லை. காச்சிச்சுண்டின பாலுக்குக் கற்கண்டுப்பொடி போடாமலிருப்பதும் இல்லை. இந்த நித்திய அனுபோகங்கள் நேரில்நின்றும், பிரத்தியட்சப்பித்தலாட்டப்பொய்ப் புராணக் கதைகளின் மௌட்டீகத்தைத் தெரிந்து விலகவில்லையே.

புத்தியில்லை என்றால் கோபிப்பார்கள். எது புத்தியென்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. உணர்ச்சியில்லை என்றால் பல்லைக் கடிப்பார்கள் எது உணர்ச்சி என்பதைக் ஆலோசிப்பதில்லை. மானமில்லையென்றால் எனக்காவென்று மாரைத்தட்டுவார்கள். மான மென்பதென்னவென்று சிந்திப்பதில்லை. தான் செய்யும் காரியங்கள் நன்மையா? தீமையா? நட்டமா? லாபமா? பலனற்றதா? பலனளிப்பதா? எப்படியிருந்தால்நன்மை? எப்படிஇருந்தால்தீமை? அதற்கு நியாயம் எத்தன்மையது? அனுபோகம் எப்படிநடந்திருக்கிறது? அறிவிற்கு ஒத்திருக்கிறதா? விவேகம் விளக்கிக் காட்டுகிறதா? என்பவைகளை விசாரித்துஅறிவது புத்தி. அறிந்ததைப் பற்றுவது உணர்ச்சி. அதன்வழி நிற்றல்மானம். இவைகள்தான் மனித லெட்சணங்களிலும் அலங்காரங்களிலும் முதல் ஸ்தானம் வகிக்கக் கூடியவைகளாகும்.

எப்படியும் இந்த வருடத்து மாமாங்கம் தீர்ந்தது. தண்ணியும் அன்னிய நாட்டுப்பால் டின்னும் காபியாகி பணமாயிற்று, வடித்த கஞ்சியும் புளித்தமோர் வாசனையும் கருகும் கறுவேப்பிலையும் சேர்ந்து தயிர் சாதப் பொட்டணமாயிற்று. அரிசிமாவும் பருப்புவாசனையும் புளியும் மிளகாயும் சேர்ந்து சாம்பார் சாதப் பொட்டணமா யிற்று, பாலக்காட்டுப்புளித்துலாம் 1-4-ரூ. வடக்கித்தி மிளகாயும்விளக்கித்திமிளகாயும் துலாம்2½ 3ரூகடலெண்ணை குடம்4ரூநடுகுருபாயிக்கு 4, 4½படிபொன்னாச்சி வெங்காயம் மூட்டை 2ரூ. காலணாவிற்கு கருவேப்பிலை கைநிறைய திருப்பத்தூர் கப்புத்துவரம் பருப்பு ரூபாயிக்கு 6படி உளுந்தம் பருப்பு 6படி புழுங்கலரிசி 8படி பச்சரிசி 6படி இத்தனை மலிவான சாதனங்களைக்கொண்டு தயார் செய்யப் பட்ட சாம்பார் தயிர் சாதப் பொட்டணங்கள் பரோபகார நிமித்தம், ஜீவகாருண்யத்தை முன்னிட்டு பாவத்தைப் போக்கிக் கொள்வரும் பாவிகளுக்கு பக்குவமாய் முனிசிபல் சேர்மன் தாலுக்காபோர்டு பிரசிடெண்டுஇவர்களின்மேல்விசாரணைஉதவியோடு கும்பேஸ்வரருடைய ஸ்கானித்தியத்தால் ஐந்து தம்படிக்கு மேல் எழு தம்படிக்குள் அடங்கும் ஒரு சாதப் பொட்டணம்மகா மகக்கமிட்டிகளின் நியாயபரி சோதனை உத்தரவுப்படி கடவுள் கருணைக்குப் பயந்து பாவத்தைத் தீர்க்கும் தீர்த்த மகிமையின் மகுத்துவத்தால் நியாயமான சத்தியத்துடன் ஒன்னரை அணவிற்கு விற்று பணமு மாயிற்று. வீட்டுக்காரர்களுக்கு ஒரு நாளைக்கு மாதக்கணக்கான வாடகை வந்து விட்டது. அர்ச்சகர்கள், புரோகிதர்கள். உள்ளூர் பார்ப்பார்கள், வெளியூர் பார்ப்பார்கள் ரயில். மோட்டார், சினிமா, நாடகம், சங்கீதக்கச்சேரி, சஞ்சாக்கடை, கள்ளு, சாராயம், பீர், பிராண்டிக்கடைகள் சில்லரையாபாரிகள் முதலியவகளெல்லாம் மாமாங்கக்குளத்தில் குளிக்காவிட்டாலும் அந்த ஸ்தலத்தை மிதித்த மகுத்துவத்தால் பாவம் ஒருபகுதியேனும் போயிருக்கும். இரண்டு லட்சம் பேருக்குச்சாப்பாடு போடுவதாக சமான்வசூல்பண்ணின சுப்பிரமணிய சிவா அய்யர் பலனால் வழக்கத்தைப் போல சாமான்களையெல்லாம் கடைக்கேயனுப்பியிருப்பார். பிராமணபோஜனம் பரதேசிக்குச்சாப்பாடு முதலியவைகளுக்கு வசூல்பண்ணி கைங்கிரியம் பண்ணினவர்களுக்கு அரிசி பருப்பாவது மிஞ்சியிருக்கும் மாமாங்கசம்பந்தத் தனிக்கன்றாக்ட்டுகளின் வேலைகள் முடிவடையாமலாவது அரைகுறையாக அள்ளித்தெளித்தாலும் அதில் ஏமாற்றியிருந்தாலும் கௌவுன்சில்கள் மெம்பர்கள் தயவால்ஓவர்சியர்கள்இஞ்சினீர்கள்கணக்கில் சத்திருத்து,வெட்டு,தள்ளு,நீட்டு முதலியவைகள் போடாமல்ஸ்தலவிசேடத்தை நினைத்து எல்லாக்கன்றாக்ட்டர்களுக்கும் பணம்கொடுக்கும்படியாய் சிபார்சுசெய்து தங்கள் வரவு செலவையும் தீர்த்திருப்பார்கள். இன்னும் அநேகர்களுக்கு புண்ணிய தீர்த்தவிஷேடத்தால் பல லாபங்கள் கிடைத்திருக்கும் மகாமகப்புண்ணியதீர்த்தமாடப் போனவர்களுக்குப் போனபாவமும் வந்த புண்ணியமும் தெரியவில்லை ஊகித்துகண்டுபிடித்துத்தெரிந்து சொல்லவேண்டுமானால் இப்பொழுது குடி அரசில் இடம் போதவில்லை.

———

The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு

நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்க முன் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:— விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,

43, கச்சேரி வீதி, ஈரோடு.

"குமார விகடன்"

ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை.

உங்கள் வேலைக் கஷ்டங்களினிடையே சிரித்து மகிழ நமது குமார விகடனைப் படியுங்கள்.

சிறந்த கதைகள், ஆழ்ந்த பொருள்களுள்ள நகைச்சுவை ததும்பும் கட்டுரைகள், விகடங்கள், தமாஷ்கள், ஏராளமான படங்கள், சிறுகதைகள், பரிசுப்பந்தயங்கள் முதலியன நிறைந்து கிடக்கின்றன. அவை ஒவ்வொரு பக்கமும், ஒவ்வொரு வரியும் நகைச்சுவையைத் தந்து இன்பமூட்டுவன.

ஸ்ரீமுக ஹு சித்திரைமீ 1-உ முதல் வெளிவரும். பழைய பிரதிகள் கிடைக்கமாட்டாது. ஆகையால் முதலிலிருந்து சந்தாதாரராய்ச் சேர்வதே நலம்.

முதல் வெளியீட்டில் 25 ரூபாய் பந்தயமென்றும் ஒருவருஷ பத்திரிகை இனாம் பந்தயமென்றும் ஆக இரண்டு பந்தயங்கள் வருகின்றன.

டிம்மி 1/8 அளவில் 80பக்கங்கள் நேர்த்தியாகஅச்சிடப்பட்டது

வருட சந்தா ரூ. 1—4—0 சந்தா மணியார்டராக அனுப்பினால் 2 அணா செலவு, வி. பி. செய்தால் 5 அணா ஆகிறது. ஆகையால் சந்தா தொகையை மணியார்டர் செய்வதே நலம்.

மானேஜர், குமார விகடன், காஞ்சீபுரம்.

குறிப்பு:—எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை—நல்ல கமிஷன் கொடுக்கப்படும். விவரத்திற்கு எழுதவும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கிலாந்திலுள்ள கைத்தொழிலாலையில் புதிய இயந்திரங்கள் புகுத்தப்படும் பொழுதெல்லாம் அதன் காரணமாக சீனாவைப்போன்ற தேசங்களில் கோடிக்கணக்கான தொழிலாளிகள் வேலையில்லாத் திண்டாட்டமென்கிற படுகுழியில் விழுகின்றனர். பரந்த திட்டக் கைத்தொழிலானது உலகிலுள்ள எல்லா தேசத்தவரையும் ஒரு சம்பந்தத்திற்கு உட்படுத்தி நூற்றுக்கணக்காக இருந்த சிறிய வியாபாரச் சந்தைகளையெல்லாம் ஒரே பெரிய வியாபாரச் சந்தையாக மாற்றி எங்கு பார்த்தாலும் நாகரீகத்தையும், முன்னேற்றத்தையும் புகுத்தி விட்டது. ஆகையால் நாகரீக நாடுகளில் ஏற்படும் சம்பவங்களின் எதிரொலியானது எங்கு பார்த்தாலும் கேட்கின்றது.

இன்றைய தினம் இங்கிலாந்திலும், பிரான்சிலுமுள்ள தொழிலாளர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பெற்றார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். இந்நிகழ்ச்சியானது உலகில் எங்கு பார்த்தாலும் ஒரு புரட்சியை கிளப்பி விட்டு பிரதேச தொழிலாளர்களின் விடுதலையையும் அது துரிதப்படுத்தும்.

இரண்டாவதாக, பரந்த திட்ட கைத்தொழிலானது, பண்டைக் கைத்தொழில் முறையை ஒதுக்கித் தள்ளிய போதிலும், "நிரந்தர ஜீவிய" வகுப்பார் பணத்திலும் செல்வாக்கிலும் செழித்தோங்கி வளர்ந்து. தேசத்திலே ஆளும் வகுப்பாராக ஆகி விட்டனர். ஆகவே எவ்வெவ்விடத்தில் கைத்தொழில் முறையில் தீவிர மாறுதல் ஏற்பட்டதோ, அவ்வவ்விடத்தில் நிரந்தர ஜீவிய வகுப்பினர் ராஜீய அதிகாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு மான்ய பிரபுக்களையும், யதேச்சாதிகார அரசாங்கத்தையும் சக்தியற்றவையாக்கி விட்டனர். இப்பொழுது நிரந்தர ஜீவிய வகுப்பானது ராஜீய உலகிலேயே ஒரு உச்சஸ்தானத்தைப்பெற்றிருக்கின்றது. தங்களுடைய கொள்கையாகிய கட்டுப்படுத்தப்படாத போட்டியையே அடிப்படையாகக்கொண்ட பிரதிநிதித்வம் பொருந்திய ஓர் அரசாங்கத்தை இவர்கள் உண்டாக்கினர். இவ்வரசாங்கத்தில் குறிப்பிட்ட மூலதனத்தையுடையவர்களே வாக்காளர்கள் ஆவார்கள். அதாவது நிரந்தர ஜீவிய வகுப்பைச் சேர்ந்தவர்களே வாக்காளர்களாக இருந்தனர். இந்த முதலாளி வகுப்பைச் சேர்ந்த வாக்காளர்கள் தங்களுடைய வகுப்பைச் சேர்ந்தவர்களையே, பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பார்கள்.

மூன்றாவதாக, முதலாளி வகுப்புகள் வளர வளர ஏழைத் தொழிலாள வகுப்பினரும் பன்மடங்காக விருத்தியடைகின்றனர். முதலாளிகள் பணத்தில் மேம்பாடடைகின்றனர். ஆனால் ஏழைத் தொழிலாளிகளோ எண்ணிக்கையில் அதிகரிக்கின்றனர். மூலதனம் அதிகமாவதால் ஏழைத்தொழிலாளர்கள் பன்மடங்கு கூலிவேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அதே மாதிரி மூலதனமானது தொழிலாளர்களை உற்பத்தித்தொழிலில் வேலைக்கு அமர்த்துவதனால் தான் விர்த்தியடையும். ஆகவே மூலதனத்தின் விர்த்தியும் ஏழைத்தொழிலாளர் எண்ணிக்கை விர்த்தியும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருக்கிறது.

ஒரே காலங்களில் முதலாளிகளும் தொழிலாளிகளும் பெரிய நகரங்களில் சென்று வசிக்கின்றனர். ஏனெனில் பெரும் நகரங்களில்தான் கைத்தொழில் விர்த்திக்கு வேண்டிய சாதனங்கள் இருக்கின்றன. இவ்விதமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏராளமான ஜனங்கள் கூட்டமாக வசிப்பதால் எளிய தொழிலாளர்கள் தங்களுடைய சக்தியை அறிகின்றனர். புதிய இயந்திரங்களும் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட முறைகளும், தொழிலாளர்களின் கூலியைப் படிப்படியாக கீழ் நோக்கிக் கொண்டே சென்று ஏழைத் தொழிலாளரின் நிலையைச் சகிக்க முடியாததாக மேன்மேலும் செய்து விடுகிறது. இப்படியாக தொழிலாளர்களிடையே காலக்கிரமத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் வெறுப்பும் அவர்களுடைய சக்தியும் — சமூகத்தினிடையே ஒருவித புரட்சியை உண்டாக்குவதற்கு காரண பூதமாய் இருக்கின்றன.

கேள்வி:- கைத்தொழில்முறையில் ஏற்பட்ட தீவிர மாறுதலின் பின்னால் ஏற்பட்ட பயனென்ன?

பதில்:—நீராவியினால் ஓட்டப்படும் இயந்திரங்களினால் செய்யப்படும் உற்பத்தியானது மிகவும் கட்டுக்கடங்காததாகி விட்டது. சில முதலாளிகள் உற்பத்தித் தொழிலில் தீவிரமாக இறங்கினர். அதன் பயனாக சீக்கிரத்தில் எவ்வளவு தேவையோ, அதைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உற்பத்தி ஏற்பட்டது. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. தொழிலாலைச் சொந்தக்காரர்கள் க்ஷீணதசையடைந்தனர். தொழிலாளர்கள் உணவின்றி அலைய ஆரம்பித்தனர். எங்கு பார்த்தாலும் கஷ்டமே ஏற்பட்டது. சிறிதுகாலம் சென்ற பிறகு தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட விலை பொருள்கள் விற்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் ஆலையந்திரங்களின் நாதம் எழுந்து வியாபாரம் திரும்பவும் துரிதமாக எழ ஆரம்பித்தது. ஆனால் இவ்வித உன்னத நிலை நெடுநாள் நீடிக்கவில்லை. மறுபடியும் அபரிமிதமான உற்பத்தியின் பயனாக மற்றொரு வியாபார நெருக்கடி ஏற்பட்டது. இதே மாதிரி சென்ற நூற்றாண்டில் வியாபார உலகத்தில் உன்னத நிலையும் நெருக்கடியும் ஒன்றை ஒன்று தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. இவ்வித நிகழ்ச்சிகளால் தொழிலாளர்களின் ஜீவியமானது மிகவும் சகிக்க முடியாத துன்பத்தில் ஆழ்ந்திருந்தது. இதன் பயனாக அவர்களிடையே தீவிர எண்ணங்களும், தற்கால சமூகத்தையே மாற்றவேண்டுமென்ற அபிப்பிராயங்களும் உண்டாயின.

கேள்வி:—அடிக்கடி ஏற்படும் இந்த வியாபார நெருக்கடிகளினால் உண்டாகும் பலன்களென்ன?

பதில்;—கட்டுப் படுத்தப்படாத வியாபாரப் போட்டியினாலும், பொதுவாகக் கைத்தொழிலானது தனிப்பட்டமுதலாளிகளினால் நடத்தப்படுவதினாலும், உற்பத்தியானது தடைப்படுகின்றது. இத்தடையானது நீக்கப்பட வேண்டும். பரந்த திட்டக் கைத்தொழிலானது அழிக்கப்படவேண்டும். அல்லது அப்பரந்த திட்டத்தொழிலானது ஒரு புதிய சமூகத்தாலேயே நடத்தப்பட வேண்டும். அப்புதிய சமூகமானது தனிப்பட்ட ஆலைச் சொந்தக்காரர்கள் தங்களுக்குள் போட்டியிடுவதை அடக்கி விட்டுத் தொழில் உற்பத்தியைமாத்திரமே ஒரு திட்டத்தோடு நடத்திவர முன்வரவேண்டும்.

வியாபாரநெருக்கடிகளும், நில மாற்றங்களும் அப்பொழுது ஏற்படாது. இதிலிருந்து இரண்டு விஷயங்கள் தெரிகின்றன.

(1) பரந்த திட்டக் கைத்தொழிலினால் ஏற்படும் கஷ்ட நிஷ்டூரங்கள் தற்கால சமூக நிலைக்கு ஒத்துவராத சில விஷயங்களால் ஏற்படுகின்றன.

(2) இவ்விதக் கஷ்டங்களைப் போக்குவதற்கும் ஒரு புதிய சமூகத்தையே சிருஷ்டி செய்வதற்கும் வேண்டிய தகுந்த கருவிகள் நம்மிடமேயிருக்கின்றன.

கேள்வி:—இந்தப்புதிய சமூகமானது எவ்விதமாயிருக்கும்?

பதில்:—முதன் முதலாகக் கைத்தொழில்களும், இதர உற்பத்தித் தொழில்களும், ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டிருக்கும் தனிப்பட்டமுதலாளிகளிடமிருந்து பிடுங்கப்பட்டுப்போது மக்களுக்கே சொந்தமாக்கப்படும். அதாவது கைத்தொழிலானது ஒரு குறிப்பிட்ட திட்டத்தின்படி நடத்தப்படும் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் இந்த உற்பத்தி வாழ்க்கையில் பங்கெடுத்துக்கொள்வார்கள். வியாபாரப் போட்டியானது ஒழிக்கப்பட்டு அதற்கு பதிலாக கட்டுப்பாடு ஏற்படும். கைத்தொழிலானது தனிப்பட்ட முதலாளிகளால் நடத்தப்படுவது, தனிப்பட்ட சொத்துரிமை தத்துவத்தையே குறிக்கின்றதுஆகவே தனிப்பட்டசொத்துரிமையும் அழிக்கப்பட நேரிடும். "தனி உடமைத் தத்துவ கொள்கையை அழித்தல்" என்ற வாசகமே சமூகத்தில் அவசியமாக ஏற்பட வேண்டிய தீவிர மாறுதல் என்பதைக் குறிக்கின்றது. ஆகவே பொதுவுடமையாளர்கள் தங்களுடைய கொள்கைகளில் முதன் முதலாக இந்தப் பிரச்சினையைக் கிளப்புகின்றனர்.

கேள்வி:—இதற்கு முந்திய காலத்திலேயே தனிப்பட்ட சொத்துரிமையை அழிப்பது சாத்தியப்படவில்லையா?

பதில்:—இல்லை. சமூகத்திலேற்படும் ஒவ்வொரு மாறுதல்களும் சொத்து சம்பந்தத்தால் ஏற்படும் ஒவ்வொரு மாறுதல்களும் பண்டைய கால அபிப்பிராயங்கள் அக்காலத்துச் சமூகத்தைத்திருப்தி செய்ய முடியாத போது தான் ஏற்படுகின்றன. தனிப்பட்டசொத்துரிமை யென்பதும் இவ்விதமே உற்பத்தியாயிற்று. ஏனெனில் தனிப்பட்ட சொத்துரிமை என்பது எப்பொழுதுமே இருந்து வந்ததில்லை. மத்தியகாலமானது முடிவடையுஞ்சமயத்தில் ஒரு புதிய உற்பத்தி முறையானது புகுத்தப்பட்டது. இதுதான் ஆதிகாலத்துச் சிறிய கைத்தொழில் முறை. அப்புதிய முறையானது ஒரு புதிய சமூகத்தை உண்டாக்குவதற்குக் காரணமாயிருந்தது. அப்புதிய சமூகத்திற்கும் அதற்கு முன்னிருந்த மான்யப் பிரமாண சமூகத்திற்கும் வெகு தாரதம்மியமிருந்தது. அதிலிருந்து தான் தனிப்பட்ட சொத்துரிமையென்பது கிளம்பிற்று. தனிப்பட்ட சொத்துரிமை என்ற சொத்து

சம்பந்தத்தைத் தவிர அச்சிறு கைத்தொழில் காலத்தில் வேறொரு சம்பந்தமும் சாத்தியப் படாமலிருந்தது. மத்திய காலத்தில் விவசாயமே முக்கியத்தொழிலாக இருந்தது. ஆகவே ஊழியக்காரனும், நிலச்சுவான்தார் பிரபுக்களும் ஏற்பட்டனர். 17 வது நூற்றாண்டில் சிறு கைத்தொழில் சொந்தக்காரர்களும் அத்தொழிலில் ஈடுபட்ட தொழிலாளிகளுமிருந்தனர். ஆனால் 19 வது நூற்றாண்டோ பெரும் ஆலை முதலாளிகளையும், ஏழைத் தொழிலாளிகளையும் உண்டாக்கி விட்டது. நம்முடைய காலத்தில் முதலாளிகளும் உற்பத்தி முறைகளும் எண்ணிலடங்காத விதத்தில் ஏற்பட்டு விட்டது. உற்பத்தி சக்திகளெல்லாம் ஒரு சில முதலாளிகளின் கையில் சேர்ந்து விட்டன. ஆகையால் ஜனங்களில்பெரும்பான்மையோர் ஏழைத்தொழிலாளியாக மாறுகின்றனர். முதலாளிகளின் கையில் தனமானது விர்த்தியடைய, அடைய ஏழைத்தொழிலாளியின் நிலைமை மிகவும் கேவலமாக்கப் பட்டுச் சகிக்க முடியாததாகச் செய்யப்படுகின்றது. இந்த மா பெரும் உற்பத்தி முறையும் சக்தியும் முதலாளிகளின் தனிப்பட்ட சொத்துரிமை சம்பந்தத்திற்குள் அடங்காமல் அவற்றைக் கிழித்துக் கொண்டு புறப்படுகின்றது. ஆகவே தனிப்பட்ட சொத்துரிமையை அழித்தல் சாத்தியமானதுமல்லாமல், அவசியமுமாகின்றது.

(தொடரும்)

மதமும் லெனினும்.

100 பக்கம் விலை அணா 0—4—0. 100 புத்தகம் 12-8-0 தபால் செலவு வேறு.

ஜார்ஜ் பெர்னாட்ஷாவின், அமெரிக்க சொற்பொழிவும், பத்திரிகைபிரதிநிதிகளுக்கு அளித்த சேதிகளும்.

விலை அணா 0—1—0. 100 புத்தகம் 3—0—0. தபால் செலவு வேறு.

இவைகளில் 100 புஸ்தகங்கட்குக் குறைந்த ஆர்டர் செய்பவர்கட்கு மேற்கண்ட குறைந்த விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. இதற்குக்கமிஷன் இல்லை.

விலாசம்:— மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

டாக்டர்

சிங்காரம் அவர்களின்

மஹா சந்தனாதித்தைலம்.

(ரிஜிஸ்டர்டு)

குளிர்ச்சியைக் கொடுப்பதில் உலகப்பிரசித்தி பெற்றது கண்பார்வை குறைவாயிருந்த அநேகருக்குஇத்தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தைலத்தால் குணமாகும் நோய்கள்.

கண் எரிச்சல்
கண் சிவப்பு
கண்ணில் நீர்வடிதல்
கண் அரிப்பு
கண் பார்வைக்குறைவு
கண் கூச்சம்
கண்ணில் பீளை சாருதல்
மேக நீர், வெள்ளெழுத்து
ஒருத்தலை நோய்
கை கால் எரிச்சல்
மூலச்சூடு
அஸ்திகாங்கை
வெட்டைச்சூட்டால் உண்டாகும் திரேகக் காந்தல்
காது நோய், காது மந்தம்
மண்டை இடி
பீனிசம்
தலை மயக்கம்
தலைப் பொடுகு
சொரி சிரங்கு
தலைமயிர் உதிர்தல்
நாள்பட்ட தலை நோய்

முதலிய பல வியாதிகளை ஆச்சரியமாய் குணம் செய்யும். சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக் கொடுக்கும். ஆண் பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். பத்தியமில்லை.

24 அவுன்ஸ் டின் ரூ. 4-0-0
12 ,, ,, ரூ. 2-2-0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

இந்தியாவின் குறைபாடு.

160 பக்கம் 0—8—0. 100 புத்தகம் 25—0—0. தபால் செலவு வேறு.

முன் பணம் வராதஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது. தபால் செலவு சேர்த்தனுப்பாத ஆர்டர்களுக்கு தபால் செலவுக்காக வி. பி. எடுத்துக் கொள்ளப்படும்.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100-புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், சுக்கிலமேகம், வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

தேற்றா எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும், கர்ப்பாசயம்; சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீக்கி கெர்ப்பமுண்டாகும். புட்டி 1க்குவிலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

எமது கேட்லாக்

இனம்!

சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன. விபரத்திற்கு எழுதுங்கள்.

ஸ்கலித நிவாரணி.

பலஹீனத்தினாலும், உஷ்ணத்தினாலும், தூக்கத்தினாலும், சொப்பனத்தினாலும், இந்திரியம் தானாக வெளிப்படுவதை நிற்பாட்டி தேகத்திடத்தைத்தரும். புட்டி ஒன்றுக்கு ரூ. 2—0—0.

மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழநி. S. I.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
5.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ...	0—6—0
6.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
7.	மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
	The crux of the Indian Problem By Dr. PARANJPYE (in English.) விலை ரூ.	1—0—0
	"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ.	0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

சுயமரியாதை இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் ஈ. வெ. ராமசாமி, முதலிய எல்லா தலைவர்களது படமும் $6\frac{1}{2} \times 4\frac{3}{4}$ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ 1-க்கு 0—12—0. மொத்தமாய் வாங்குகிறவர்களுக்கு 100-க்கு 12—8—0 வீதம் கமிஷன் கழித்துக் கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 0—12—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். முன்பணமில்லாத ஆர்டரை கவனிக்கப்படமாட்டாது.

விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

சுயமரியாதை தங்கரத்தினத் தெம்மாங்கு.

இது விருதுநகர் 3-வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை	ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட ,,	0-12-0
,, 100க்கு ,, ,,	5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர்	0-1-6

அணா ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

ஏஜண்டுகள் தேவை.

நமது "குடி அரசு" பத்திரிகையை விற்பதற்கும், சந்தாதாரர்களை சேர்ப்பதற்கும் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் கீழ்க்கண்ட இடங்களுக்குத் தேவை.

செங்கல்பட்டு
விழுப்புரம்
புதுச்சேரி
கடலூர்
திருப்பாப்புலியூர்
திருப்பூர்
நாமக்கல்
முசிரி
குளித்தலை
கோபிசெட்டிபாளையம்
வாணியம்பாடி
பண்ருட்டி
திருமங்கலம்
சாத்தூர்
கோவில்பட்டி
சிவகங்கை
மணப்பாறை
போடிநாயக்கனூர்
சிதம்பரம்
சீயாழி
நெல்லிக்குப்பம்
நன்னிலம்
அம்பாசமுத்திரம்
அறந்தாங்கி
கோயமுத்தூர்
பாபநாசம்.

விபரமறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
மானேஜர், "குடி அரசு" ஈரோடு.

உங்கள்.

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

பண்டிட் ஆனந்தரின்,

அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ண அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.

விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப் பட்டது. இதன் விலை அணா. 0—8—0.

இராமாயண ஆராய்ச்சி.

முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னாட்ஷா.

விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சுவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.